
இந்திரா சௌந்தர்ராஜன்
அதிர்ஷ்டக் காற்று

# அதிர்ஷ்டக் காற்று

## 1

'பஞ்சபூதங்களில் காற்று மிக மாறுபட்டது. பல விசேஷ குணங்களை உடையது. மற்ற பூதங்களைப் பார்க்க முடியும். காற்றை உணர மட்டுமே முடியும். எனவே காற்றை இறை வடிவம், மன வடிவம் என்றெல்லாம் சொல்வார்கள். அடுத்து காற்றால்தான் மனிதன் பிரபஞ்சத் தொடர்போடு இருக்கிறான். காற்று அறுந்து போனால் மற்ற நான்கு பூதக் கட்டுகளால் ஆன உடலில் வெப்பம் விலகிட, உடம்பானது ஜலம் பெருக்கி நிலமிசை உடைந்து ஒழுகிப் போகும். காற்றுதான் ஆதாரசக்தி. இந்த சக்தியை பிரதானமாகக் கொண்ட தெய்வம்தான் அனுமன். வாயுமைந்தன் என்பதும் அவர் பெயர்களில் ஒன்று. காற்றின் குணங்களில் மேலான ஒன்று ஓரிடத்தில் அதை வீசவும் வைக்கலாம்; விலக்கியும் வைக்கலாம். கூடிக் குறைக்க அது இடம் கொடுக் கிறது. மனித வாழ்வில் பொருளாதாரம் சார்ந்த விஷயங்களும் கூடிக் குறைவதாகத்தானே உள்ளது?'

**உ**ண்மைதான்!

அந்த தார்ச்சாலையை, ரவி பணியாற்றும் ஆரத்தி கார்ப்பரேஷன் என்கிற நிறுவனம்தான் போட்டிருந்தது. அதனால்தான் அதில் அவ்வளவு நேர்த்தி.

அவனும் புதிதாக 'அப்பாச்சி' பைக் வாங்கியிருந் தான். இப்பொழுதெல்லாம் வாகனங்கள் ரதம்போல வெளி வருகின்றன. உலகம் முழுக்க ஒரே போட்டி. அதனால் தரமாகவும், அழகாகவும் விதவிதமான வசதிகளோடும் நிறையவே புதிய பைக்குகள். இந்த பைக்குகள் மேல் சாய்ந்து நின்றே டெண்டுல்கரும், டோனியும் கோடிக்கணக்கில் சம்பாதித்துவிட்டார்கள். அதைப் பார்த்துதான் ரவியும் ஒரு பைக்கை வாங்கி யிருந்தான். ஐம்பத்தைந்தாயிரம் ரூபாய் வரை ஆனதாகக் கேள்வி. இதில் ஐம்பதாயிரம் ரூபாயை ஒரு வங்கி தானாகவே முன்வந்து கடனாகக் கொடுத்துவிட்டது.

இத்தனைக்கும் ரவி அந்த வங்கியை கடனுக்காக அணுகவேயில்லை. அந்த வங்கியில் இருந்து ஒருவர் வந்து ரவியைப் பார்த்திருந்தார். அன்று அவரோடு நடந்த பேச்சுவார்த்தைகள் ரசமானவை.

"பைக் வாங்க ஆசைப்பட்டீங்க போல இருக்கே?"

"ஆமாம்... உங்களுக்கு யார் சொன்னது?"

"யாரும் சொல்ல வேண்டாம் பாஸ். நீங்க நினைச் சாலே போதும். நாங்க மோப்பம் பிடிச்சிடுவோம்."

"சரி... பிடிச்சி என்ன பண்ணுவீங்க?"

"கடன் தருவோம். அப்புறம் மாசா மாசம் உங்க சம்பளத்துல இருந்து பிடிச்சிக்குவோம்."

“அதை நான்தானே முடிவு செய்யணும்?”

“அதைக்கூட உங்களுக்காக நாங்களே முடிவு செய் துட்டோம். இனி நீங்க பைக்கை வாங்கிட்டு நல்லா ஊரைச் சுத்த வேண்டிய்துதான் பாக்கி...”

“எனக்கும் ஆசைதான். ஆனா அதுக்குத் தகுந்த ரோடுங்க நம்ப ஊர்ல இல்லையே.”

“இருக்கிற ரோட்ல ஓட்டுங்க பிரதர். நல்ல ரோடா இருந்தா பைக்கும் லாங் லைஃப் வரும். குண்டும் குழியா இருந்தாதானே அது சீக்கிரமா கெட்டுப்போய் பைக்கும் கெட்டுப்போகும்? நீங்களும் அடுத்த புது பைக்குக்கு வேகமா எங்ககிட்ட கடன் வாங்க வருவீங்க?”

“அப்ப என் மாதிரி இளைஞர்களைக் கடன்காரனா வெச்சிருக்கறதுதான் உங்க நோக்கமா?”

“நிச்சயமா... மனிதர்களைக் கடந்து நாய், பூனை, கிளிகளுக்கெல்லாம் கடன் கொடுத்து அவைகளையும் கடன்காரங்களா மாத்தறதுதான் எங்க எதிர்கால திட்டம்.”

இப்படி நடந்து முடிந்த பேச்சு. வார்த்தையின் எதிரொலியாகத்தான் ‘அப்பாச்சி’ பைக்கை அவன் அடைந்திருந்தான்.

அவன் அதை வாங்கியதே கூட அகிலாவுக்காகத் தான்!

அது யார் அகிலா?

இந்தக் கதையினை வாசிக்கும் உங்களில் எத்தனை பேருக்கு அத்தை மகள்கள் இருக்கிறார்கள் என்பது

தெரியாது. ஆனால், ரவிக்கு இருக்கும் ஒரே அத்தை மகள்தான் அகிலா!

அகிலா ஒரு நல்ல அழகியும்கூட!

இன்றைக்குள்ள மேக்கப் சாதனங்களால் கிழவிகள் கூட அழகிகளாகத் திரிகிறார்கள். அகிலா அந்த ரகம் இல்லை. கருவில் இருக்கும்போதே உடம்பின் எல்லா பாகங்களையும் திருத்தமாக பெற்றுவிட்டவள். பார்த்தால் பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

அப்படி ஒரு அழகு!

ரவி மட்டுமென்ன...? அவனும் நல்ல அழகன்தான்.. ஆரத்தி கார்ப்பரேஷனில் சூப்பரவைசராக இருக்கிறான். டிப்ளமோ பட்டதாரி. மாதம் இருபதாயிரம் சம்பளம். இதனால் ரவிக்கு அகிலாவைத் திருமணம் ·செய்து கொடுப்பதில் அவன் அத்தைக்கும் சம்மதம். நிச்சய தார்த்தம் கூட நடந்துவிட்டது. ஆனால் திருமணத் துக்குக் கிட்டத்தட்ட இரண்டு மாத காலம் வரை டயம் இருக்கிறது.

அதற்காக அதுவரை அகிலாவைப் பார்க்காமல் பேசாமல் இருக்க வேண்டும் என்பது ஒன்றும் கட்டாயம் இல்லையே...?

இப்பொழுதுகூட ட்யூட்டி முடிந்து ரவி அகிலாவைப் பார்க்கத்தான் போய்க் கொண்டிருக்கிறான். சாரி... வெரி சாரி.. பறந்து கொண்டிருக்கிறான். அவளும் அவனுக்காக தேவுடு காத்துக் கொண்டிருக்கிறாள் அவள் வீட்டில்.

அகிலா வீடு நன்கு பெரிய வீடு!

அகிலாவின் அப்பா ராமதுரை ஒரு பில்டிங் காண்ட்ராக்டர். ஒத்தையாய் இரட்டையாய் ஆறு மாசத்துக்கொரு வீடு கட்டும் சாதாரண காண்ட்ராக்டர் இல்லை இவர். அவ்வளவுமே அரசாங்க காண்ட்ராக்டுகள். மந்திரிகளில் இருந்து ஆபீசர்கள் வரை அவ்வளவு பேருமே அவர் பேண்ட் பாக்கெட்டில்.

புறாக்களுக்கு தானியம் போடுகிற மாதிரி இவர்களுக்கு துட்டை வீசி எறிந்து காரியத்தைச் சாதித்துக் கொள்வதில் பலே கில்லாடி...

அவர் வசம் எவ்வளவு துட்டு தேரும் என்பதை அகிலா வீட்டுக்குள் நுழைந்த மாத்திரத்தில் உணர்ந்து விடலாம்.

அவள் வீட்டு சோபா செட்டுகளின் மதிப்புதான் ரவியின் வீட்டு மதிப்பே...

இருந்தாலும் சிறுவயதில் இருந்தே அகிலாவின் தாயான சீதாலட்சுமி தன் அண்ணனும், ரவியின் அப்பாவுமான ராஜு என்கிற ராஜவேலுவிடம் "அண்ணே... எனக்கொரு பொண்ணு பொறந்தா அவ உன் பையனுக்குத்தான்..." என்று சொல்லிச் சொல்லியே வளர்த்துவிட்டதால் அவளது பிடிவாதத்தில்தான் இப்பொழுது நிச்சயதார்த்தம் நடந்திருக்கிறது.

இல்லாத பட்சத்தில் அகிலாவை ஒரு கலெக்டர் மகனுக்குதான் முடிவு செய்திருந்தார் ராமதுரை. சீதாலட்சுமியும், அகிலாவும் அடம்பிடித்து அவரது முடிவை மாற்ற வைத்துவிட்டார்கள்.

ஏன் என்றால் அகிலாவுக்கும் ரவியின் மேல் அப்படி ஒரு காதல்!

“பீம் பீம் பீம்...” - ரவி அவள் பங்களா முகப்பில் ‘அப்பாச்சி’யின் மேலிருந்தபடி ஹாரனை அழுத்தவும் பால்கனிக்கு ஓடிவந்தாள் அகிலா. சரியான மானின் ஓட்டம்.

அவள் வந்து நின்ற வேகத்தில் அவளது சல்வாரின் துப்பட்டா பறந்து கீழே சென்று விழுந்தது. இதுவே தமிழ் சினிமாவாக இருந்திருந்தால் அது பறந்து வந்து நேராகக் காதலன் முகத்தைத்தான் மூடும். அவன் துப்பட்டாவை விலக்கினால் காஷ்மீரில் பனிமலை ஒன்றின்மேல் நின்றுகொண்டு, “என் அன்பே என் அன்பே” என்று டூயட் பாட ஆரம்பித்திருப்பான்.

ரவி வரையில் அதற்கு சாத்தியமில்லாமல் போய் விட்டது. அகிலாவும் இறங்கி ஓடி வந்தாள். கம்பீர மான ‘அப்பாச்சி’ மேல் அமர்ந்திருந்த ரவியை விழுங்கு வதுபோலப் பார்த்தாள்.

“என்ன அகி பார்க்கறே?”

“நீ இப்ப அசத்தலா இருக்கே ரவி...”

“நீ பின்னால உக்கார். நான் இப்ப வண்டிய எடுக்கறேன். அப்ப நான் புயலா இருப்பேன்” என்றான். அவளும் ஏறி அமர்ந்தாள். அவனை இடுப்போடு கட்டிக் கொண்டாள்.

ஸ்விட்சைப் போட்டதுபோல அவனிடமும் மின்சாரம் பாய ஆரம்பித்தது.

'ட்ர்ர்ர்ர்...' அப்பாச்சி சென்னை நகர சாலைகளில் பாய்ந்து சீறியது. அவள் அவனை இறுக்கிக் கட்டிக் கொண்டே "இன்னும் வேகம்- இன்னும் வேகம்-" என்று கூற அவனும் வேகமெடுத்தான்.

அவளிடம் கொஞ்சம்கூட பயமே இல்லை.

அவன் பைக்கை முதலில் பீச்சுக்கு விடுவதாகத் தான் முடிவு செய்திருந்தான்.

அதை இப்போது மாற்றிக் கொண்டான்.

அவனது பைக் பழைய மகாபலிபுரம் சாலைப் பக்கம் ஓடியது.

"ரவி... இந்தப் பக்கம் எங்கே போறே?"

"அதெல்லாம் தெரியாது. இப்படியே போவோம். இந்த பக்கமாதான் நிறைய கடற்கரைக் குப்பங்கள் இருக்குதுல்ல...?"

"குப்பங்களுக்குப் போய் என்ன பண்ண?"

"பைத்தியம்... குப்பங்களைச் சுத்தி பேக் வாட்டர் ஏரியாவும் அடர்த்தியான தோப்புகளும் இருக்கும். தோப்புப் பக்கம் போனா யாரும் இருக்கமாட்டாங்க."

"நிஜமாவா?"

"பார்க்கத்தானே போறே..."

பேச்சோடு பேச்சாக சாலையில் இருந்து இடதுபுறமாக இறங்கிப் பிரிந்த ஒரு மண் சாலையில் பைக்கை விட்டான். அது அதிர்ஷ்டப் பொன்னியம்மன் கோயில் நோக்கிப் போயிற்று. அவனுக்கு அதெல்லாம் தெரியாது. போகப் போகக் கடற்கரை மண்சாலையாக அது மாறி

பைக்கிடமும் வேகம் குறையத் தொடங்கியது. அதே சமயம் இருட்டிக் கொண்டும் வர ஆரம்பித்தது.

"ரவி... இருட்டிக்கிட்டு வருதே! இங்க எங்கேயும் வெளிச்சத்தைக் காணோமே..." என்றாள் அகிலா.

"காதலர்களுக்கு வெளிச்சம் எதுக்கு அகி- இருட்டுல தான் நல்லா விளையாடலாம்" என்றான் சற்று செக்ஸியாக.

"ச்சீ... நான் என்ன ஆத்து வெள்ளமா அடிச்சிகிட்டு போக...? கிணத்து தண்ணி. எதுக்கு பறக்கறே?"

"நான் பறக்கலை அகி. என் இளமை பறக்குது" என்றபோது பைக் ஓர் இடத்தில் நின்றுவிட்டது.

நின்ற இடத்திற்கு எதிரில் ஏராளமான பனை மரங்கள்! கடற்காற்றின் வீச்சலில் அதன் கட்டையான காய்ந்த இலைகள் உரசும்போது ஒருவித சப்தம்.

அந்த சாலைமேல் ஒரு வயதானவர் தோளில் வலையோடு வந்து கொண்டிருந்தார். ரவியையும், அகிலாவையும் பார்த்தவர் நின்றார்.

ரவிக்கும் அவர் தேவைப்பட்டார்.

"பெரியவரே... இப்படியே நடந்துபோனா கடற்கரை வருமா?"

"உம் வரும்ல... அதுக்கு முந்தி அதிர்ஷ்டப் பொன்னிஅம்மன் கோயில் வரும்."

"அதிர்ஷ்டப் பொன்னியம்மன் கோயிலா... இது என்ன பேர்?"

"அதிர்ஷ்டப் பொன்னியைக் கும்புட்டா அதிர்ஷ்டம் அடிக்கும்னு சொல்லுவாங்க. அவ்வளவுதான் எனக்குத்

தெரியும். கோயில்ல போய் பூசாரியைக் கேளுங்க. கதை கதையா சொல்வாரு."

அந்தப் பெரியவர் ஒரு பதிலைச் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டார். ரவி அகிலாவைப் பார்த்தான்.

"என்ன... கோயில் இருக்கற இடத்துல எங்க ஒதுங் கறதுங்கற தயக்கமா?"

"இல்ல கிணத்து தண்ணி... அதிர்ஷ்டப் பொன்னிய போய் கும்பிடுவோமா?"

"அடேங்கப்பா... ஐயாவுக்கு பக்தி எல்லாம்கூட உண்டா?"

"காதலிக்கற மனுஷனுக்குள்ள எல்லா விஷயங்களும் வந்துடும் அகி...!"

"சரி சரி நடங்க... அதிர்ஷ்டப் பொன்னியம் மனைக் கும்பிட்டுட்டு வீட்டுக்குத் திரும்பற வழியைப் பார்ப்போம்."

"அகி..."

"நான் கிணத்துத் தண்ணி, எங்கேயும் போயிட மாட்டேன். அம்மாவும் அப்பாவும் உங்களை ரொம்ப நல்ல பிள்ளைன்னு நம்பித்தான் என்னை உங்ககூட அனுப்பி வெச்சிருக்காங்க. ஞாபகம் இருக்கட்டும்."

அவள் அவனைப் பேச்சோடு பேச்சாக இழுத்துக் கொண்டு நடந்தாள்.

# 2

'மனிதனிடம் பணம் காசு என்கிற விஷயம் மட்டும் நிரந்தரமாய் ஒரேமாதிரி இருந்ததே இல்லை. கூடுவதும் குறைவதும் அதன் குணம். கூடிக் குறைவதில் பஞ்சபூதங்களில் காற்றும் செல்வத்தைப் போன்றதே! திடீரென்று புயலைப் போல இது வீசும். சில இடங்களில் மிதமான தென்றலாக இருக்கும். சில சமயங்களில் காற்றே அற்றுப்போய் புழுக்கமாகவும் இருக்கும்.

இம்மட்டில் அது அதன் இஷ்டத்திற்குச் செயல்படும். எது ஒன்று தன் இஷ்டத்திற்கு அதாவது விருப்பத்திற்கு மட்டுமே நடந்துகொள் கிறதோ அதையே அதிர்ஷ்டம் என்கிறோம்.

இதன் முன்னால் ஒரு மனிதன் ஒன்றுமே இல்லாதவன். ஒவ்வொரு மனிதனும் அதிர்ஷ்டத் திற்காகத் தவம் கிடக்கிறான். அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்தே பரிசுச் சீட்டுகள், அதன் குலுக்கல்கள் போன்றவை நடைபெறுகின்றன. அதிர்ஷ்டம்... வாழ்வில் வயிற்றுக்கு அடுத்து பெரிய பங்கு வகிக்கும் ஒரு உன்னதமான விஷயம் இதுவே...!'

*__ஊள__வ்... ஊளவ்' என்று வங்காள விரிகுடா கடலிடம் வீச்சு... பனைமரங்களிடம் ஒரே சலசலப்பு. கீழே மண்*

வெளி மேல் வகிடு எடுத்தது போல வழித்தடம். அது சிறியதான அதிர்ஷ்டப் பொன்னி கோயிலில்தான் போய் முட்டி முடிந்து போயிருந்தது.

ரவியும் அகிலாவும்கூட கோயிலைத் தொட்டிருந் தனர். பூசாரியும் கோயில் கதவைப் பூட்டிக்கொண்டிருந் தார். இருவர் வருவதைப் பார்க்கவும் திரும்ப திறந்தார்.

உள்ளே தெருப் பிள்ளையார் கோயில் சந்நிதி போல ஒரு சிறிய சந்நிதி. அதனுள் குத்துக்கல் ஒன்றின் மேல் ஒரு சேரிப்பெண் அமர்ந்திருப்பது போல ஓர் உருவம்.

ரவியும், அகிலாவும் ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

பூசாரி உள்ளே சந்நிதி விளக்கை நிமிண்டிவிட்டார். பின் திரும்பி வந்தார். பேசத் தொடங்கினார்.

"என்னங்க இது... இருட்டிட்ட இந்த நேரத்துல கோயிலுக்கு வந்திருக்கீங்க..."

"இல்லீங்க. நாங்க கோயிலுக்கு வரலே. இந்தப் பக்கமா வந்தோம். கோயில் கண்ணுல படவே வந்துட் டோம்."

"அப்படியா விஷயம்... இருந்தாலும் நீங்க ரொம்ப கொடுத்து வெச்சவங்கதான்."

"கொடுத்து வெச்சவங்களா?"

"ஆமாம்ல... எங்க அதிர்ஷ்டப் பொன்னி ஆத்தா என்ன சாதாரணமானவளா? அவளைக் கும்பிடணும்னு உங்களுக்கு இன்னிக்கு விதி இருக்கப் போய்த்தான் நீங்க வந்திருக்கீங்க..."

"கோயில் பூசாரி நீங்க.. உங்க சாமிய விட்டுத் தருவீங் கள்ா, என்ன?"

"அதான் கிடையாது. உங்களுக்கு ஆத்தாளோட சக்தி தெரியாது. இவ வேண்டாம் வேண்டாம்கறவங்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கறவ. வேணும் வேணும்கறவங்களுக்கோ கிள்ளிக்கூடத் தரமாட்டா..."

"அது ஏன் அப்படி?"

"பேராசையே ஆத்தாளுக்குப் பிடிக்காது. தன்னை மறந்து இவளைக் கும்பிடணும். அப்படிக் கும்புடறவங்கள, இவளப்போல கை தூக்கிவிட யாராலையும் முடியாது."

பூசாரி ஏதேதோ பேசினார். ரவி சிரித்துக்கொண்டே கன்னத்தில் போட்டுக்கொண்டான். அகிலா, பூசாரி சொன்னதை பெரிதாக எடுத்துக்கொண்ட மாதிரிதான் இருந்தது. அவளிடம் அப்படி ஒரு மௌனம். அப்படி ஒரு இறுக்கம்.

பூசாரியும் கற்பூரம் காட்டி முடித்தார்.

ரவி அவரை ஏமாற்றாமல் தட்டில் ஒரு இருபது ரூபாய் நோட்டாகப் போட்டான். அவரோ அவன் எதிரிலேயே அதை எடுத்து அவளுக்கான உண்டியலில் போட்டார்.

அது அவனுக்கே கூட ஆச்சரியமாகத்தான் இருந்தது. அதன்பின் அவரும் கதவை அடைத்துவிட்டுப் புறப்படத் தயாரானார்.

பேசிக்கொண்டே நடக்கத் தொடங்கினர்.

"ஆமாம்... இப்படி ஜனநடமாட்டம் இல்லாத இடத்துல போய் இந்தக் கோயில் இருக்கே... இங்க கூட்டம் வருதா?" - ரவிதான் கேட்டான்.

"எங்கையோ இருக்கற நீங்க இப்ப வரலையா தம்பி."

பூசாரியின் பதிலில் ஒரு 'நறுக்.'

"அது சரி- ஒருநாளைக்கு எங்களைப் போல நாலைஞ்சு பேர் வந்துட்டு போனா போதுமா உங்களுக்கு?"

"கடவுளுக்கு எண்ணிக்கை கணக்கில்ல... பக்திதான் கணக்கு."

"அடேங்கப்பா...! அது என்ன அதிர்ஷ்டப் பொன்னின்னு பேர்...?"

"அதிர்ஷ்டத்தை அள்ளித் தர்றவ... அதான் இந்தப் பேர்."

"சாமின்னா அருளைத்தான் தரும். இங்க என்ன அதிர்ஷ்டம்னு விசேஷமா...?"

"இவ சக்திங்க அது. வாஸ்தவத்துல நூறு வருஷத்துக்கு முந்தி இந்த இடத்துல கோயில் கிடையாது. இந்த ஆத்தா பொன்னி அப்ப நம்பள போல மனுஷ ஜென்மமா பொறப்பெடுத்து இந்த மீனவ கடற்கரை பகுதில வாழ்ந்து வந்தவ. ஆத்தாளோட அப்பா பெரிய கடல் வியாபாரி... கோடீஸ்வரன்!"

"அடடே... இண்ட்ரஸ்ட்டிங்கா - இதுக்கு பின்னால கூட ஒரு கதை இருக்கும் போல இருக்குதே..."

"கதை இல்ல... உண்மைச் சம்பவம்!"

"உண்மைச் சம்பவமா...?"

"ஆமாம் தம்பி... கேட்டுட்டே போங்க. ஆத்தா கதை கேட்ட பலரை ஆத்தா எவ்வளவோ பெரிய உயரத்துக்குத் தூக்கிக்கிட்டுப் போயிருக்கா."

பூசாரி பீடிகையோட அந்தக் கதையை - அதாவது அன்று நடந்த உண்மைச் சம்பவத்தைக் கூறத் தொடங்கினார்.

"நூத்தி பத்து வருஷத்து முன்னால நடந்த சம்பவம் தம்பி இது. பொன்னிங்கற பொண்ணு இந்த பிராந்தி யத்துலதான் வாழ்ந்து வந்தா. அவளே ஒரு அதிர்ஷ்ட தேவதைன்னு தான் சொல்லணும். அவ பிறந்ததுக்குப் பிறகுதான் அவ அப்பாவான கடல் வியாபாரிக்கும் வியாபாரம் கொழிச்சிச்சு. அப்பால பொன்னியாத்தா தொட்டதெல்லாம் துலங்கினிச்சு. கோடி கோடியா சம்பாரிச்சார் பொன்னியோட அப்பாவும்...

காலம் இப்படியேவா போயிடும்?

விதி விளையாட ஆரம்பிச்சிச்சு. கடாயன்னு ஒரு கடலாடி. பொன்னி ஆத்தா போற கப்பல்ல அவன்தான் சுக்கான் வலிக்கறவன். அப்படி ஒருநாள் கடல் மேல வியாபார விஷயமா சிலோனுக்குக் கப்பல் போய்கிட்டு இருக்கைல வழியில சுறாமீன் ஒண்ணு கப்பலை சுத்தி வந்து தாக்க ஆரம்பிச்சிச்சு. எல்லாரும் பயந்து ஒதுங்கினப்ப - கடாயன் துணிச்சலைக் காட்டி அது மேல ஈட்டிய எறிஞ்சு அதைக் கொன்னான். அந்த சம்பவத்துல பொன்னியாத்தாளுக்கும் அவன்மேல ஒரு பிரியம் ஆரம்பமாயிடிச்சு. அது காதலா மாறினிச்சு. அப்பல்லாம் சாதி ஆதிக்கம் உச்சத்துல இருந்த சமயம். கடாயன் - பொன்னியாத்தா காதல் பெரியவர் காதுக்கு போச்சு. பெரியவர் கடாயனைக் கூப்பிட்டுக் கண்டிச் சார். கடாயன் 'காதல்தான் பெருசு. அதுக்காக நான் உசுரைக்கூட கொடுப்பேன்'னு நின்னான். பெரியவர் பார்த்தார். ஒரு அரிவாளை எடுத்து ஒரே போடு... கடாயன் தலை ஒரு பக்கம், உடம்பு ஒரு பக்கமா விழுந்துச்சு. அதைப் பொன்னி ஆத்தாளும் பார்த்துட்டே

இருந்தா. கண் எதிரிக்க அவ காதலன் வெட்டிக் கொல் லப்பட்ட இடத்துமேல வந்து உக்காந்தா. அதுக்குப் பிறகு எதுக்காகவும் அவ எழுந்திருக்கலை. அப்படியே உக்காந்த மாதிரியே உசுரை விட்டுட்டா. அப்படி அவ உசுர்விட்ட இடம்தான் இப்ப நீங்க பார்த்த கோயில்...”

பூசாரி சொல்லி நிறுத்தவும் ரவிக்கும் - அகிலாவுக்கும் கூட பதைப்பாகத்தான் இருந்தது. ஆழ்ந்த மௌனத்தோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

“எப்ப ஆத்தா அங்க கோயில் கொண்டாளோ அப்ப இருந்தே அவ குடும்பமே ஒண்ணும் இல்லாம போயிடிச்சு. இந்த பனங்காட்டுக்குள்ள போனா அரண்மனை மாதிரி ஒரு இடிஞ்ச வீடு தெரியும். அதான் ஆத்தா வீடு. அவ காலத்துக்குப் பிறகு அந்த வீடும் இடிஞ்சு ஒண்ணுமில்லாம போயிடிச்சு. ஆனா ஆத்தா மட்டும் தனக்கு இல்லாம போன அதிர்ஷ்டத்தை மத்தவங்களுக்குக் கொடுக்கற ஒரு தெய்வமா மாறி வர்றவங்களுக்கெல்லாம் அருள் பண்ணிகிட்டிருக்கா. அதேசமயம் அவங்கப்பா போல சாதிவெறி, அந்தஸ்து வெறி பிடிச்சவங்களையும் அவ விட்டு வைக்கறதில்லை.”

பூசாரி எச்சரிப்பது போலவும் பேசினார். அவன் பைக்கை நிறுத்திவிட்டுப் போன இடமும் வந்துவிடவே ரவி அவரிடம் பெரிதாக ஒரு கும்பிடு போட்டுவிட்டு பைக்கை ஸ்டார்ட் செய்தான். அகிலாவும் ஏறிக்கொண் டாள். பைக் புறப்பட்டது. வீட்டில் இருந்து வரும்போது பேசிய துள்ளலான பேச்சுகள் எதுவும் அவர்கள் இரு வரிடமும் இல்லை. இருவர் மனமுமே ‘பாவம் பொன்னி’ என்கிற அந்தப் பரிதாப உணர்ச்சியில்தான் இருந்தது.

இரவு மணி ஒன்பது!

பைக்கில் இருந்து உதிர்ந்த அகிலா தன் மாளிகை வீட்டினுள் ரவிக்கு டாடா காட்டிக்கொண்டே உள்ளே நுழைந்தாள்.

உள்ளே ஹாலில் அவள் அம்மா அப்பாவும் அருகில் தான் இருந்தார். அவர் முகத்தில் ஒருவித சிடுசிடுப்பு. அகிலாவின் அம்மா சீதாலட்சுமியிடம் நைச்சியமான பேச்சு.

"அகிலா... ரவியை உள்ற கூப்பிட்றதுக்கு என்ன?"

"நாளைக்கு வரேன்னுட்டுப் போய்ட்டாரும்மா!"

"ஆமா... எங்க போய்ட்டு வர்றீங்க? நெத்தில விபூதி குங்குமம் இருக்கு."

"அதிர்ஷ்டப் பொன்னியம்மன் கோயிலுக்கு..."

"அதிர்ஷ்டப் பொன்னியம்மனா... புதுசா இருக்கே? கேள்விப்பட்டதே இல்லையே..."

"ஆமாம்மா. எங்களுக்கே புதுசுதான். அத்தான் பீச் பக்கமா போனப்போ அங்க வழில இருந்துச்சு."

அகிலா பேசிக்கொண்டே உர்ரென்று இருந்த அப்பா ராமதுரையைப் பார்த்தாள். அவருக்கு அவள் இப்படி வெளியே போய்விட்டு வந்தது பிடிக்கவில்லை என்பது நன்றாகத் தெரிந்தது.

"என்ன டாடி உர்ருன்னு உக்காந்துருக்கீங்க..."

"........."

"பேசுங்க டாடி..."

"என்னத்தப் பேச... நாளைக்குக் கல்யாணம் ஆகப் போற பொண்ணு இப்படி ஊரைச் சுத்திட்டு வந்தா என்னம்மா அர்த்தம்?"

"நான் என்ன கண்டவனோடையாப்பா சுத்தினேன்? நான் கல்யாணம் பண்ணிக்கப் போற ரவியோடதானே?"

"அதான் கல்யாணம்னு ஒண்ணு பண்ணிக்கப் போறேல்ல. அதுக்கப்புறம் புருஷன் பொண்டாட்டியா ஊரைத்தான் சுத்து, இல்ல உலகத்தையே சுத்துங்க. யார் கேக்கப்போறா. இப்ப எதுக்கு இந்த முந்திரிக் கொட்டைத்தனம்?"

ராமதுரை கடுகுமாதிரி பொரிந்து தள்ளினார். சீதா லட்சுமிக்கே அவர் பேச்சு அதிகப்படியாகத்தான் தெரிந்தது.

"அட என்னங்க நீங்க... சின்னஞ்சிறுசுங்க வயசுக் காலத்துல அப்படி இப்படி இருக்கறது சகஜம்தானே? எதுக்கு இப்ப இதைப்போய் பெருசுபடுத்தறீங்க..."

"எல்லாம் நீ கொடுக்கற இடம்டி."

ராமதுரை கத்திவிட்டு எழுந்து போனார். அகிலாவுக்கு முகமே வாடிவிட்டது. சீதாலட்சுமி வந்து தோளைத் தொட்டு ஆறுதலாகப் பேசினாள்.

"அகி- அப்பா பத்தித்தான் தெரியுமே- விடு. மனசைப் போட்டு அலட்டிக்காதே."

"இல்லம்மா... அப்பாவுக்கு இந்த கல்யாணத்துல இஷ்டம் இல்ல. ரவி அத்தான் ஏழைங்கற எண்ணம் அப்பாவுக்கு..."

"நான் மட்டும் யார்... உங்கப்பாவைக் கட்டிக்கிட்டு வரும்போது அவரும்தான் ஏழை... இடைல பணம் வரவும் இப்ப ஆடுறாரு. விட்டுத் தள்ளுங்கறேன்ல..."

சீதாலட்சுமி கட்டிப்பிடித்துத் தந்த ஆறுதல் அகிலா வுக்கும் இதமாக இருந்தது.

# 3

‘ஒருவரது மனநிலைக்கும் அவர் சுவாசிக்கும் விதத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது என்று சொன்னால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் அதில் நிறையவே உண்மைகள் உள்ளன. இந்தப் பேருண்மையை முதலில் உணர்ந்து உலகுக்குக் கூறியவர்கள் சித்த புருஷர்களே. சுவாசிப்பு என்பது இருவிதமாகும். ஒன்று இடகலை. இன்னொன்று பிங்கலை. எப்பொழுதும் நமது சுவாசம் ஏதாவது ஒரு கலையில்தான் நிகழ்ந்தபடி இருக்கும். அதாவது இடது மூக்கு துவாரம் வழியாகக் காற்று உள்சென்றால் அது இடகலை, இதேபோல வலது மூக்கு துவாரம் வழியாகக் காற்று உள்சென்றால் அது பிங்கலை. நாம் இரு மூக்கு துவாரங்கள் வழியாக சுவாசிப்பது போலத் தெரிந்தாலும் உண்மையில் ஒரு துவாரம் தான் காற்றைத் தேவைக்கு இழுத்தபடி இருக்கும்.

‘சரி... எந்த துவாரம் வழியாகக் காற்று உள்ளே போனால் என்ன... உள்ளே போவது தானே கணக்கு?’ என்று சிலர் கேட்கலாம். காற்று உள்ளே சென்று அதில் உள்ள பலவித ஜீவ வாயுக்கள் ரத்தத்தில் கலந்து உடல் முழுக்க அவை பயணிப்பதால்தான் நாம் உயிர் வாழ் கிறோம் என்பது ஓர் அடிப்படை உண்மை.

**ஆனால் அவ்வாறு உள்புகும் காற்று எந்த துவாரம் வழியாக நுழைகிறதோ அதற்கேற்ற ஒரு வேகத்தையும் அதனால் ஒரு குறிப்பிட்ட அளவு அழுத்தத்தையும் கொண்டதாக உள்ளது. இந்த வேகம் மற்றும் அழுத்தம் இரண்டுக்கும் பின்னேதான் சூட்சுமம் உள்ளது. அடுத்து காற்றுக்கும் காலத்துக்கும் எப்பொழுதும் ஒரு பெரிய தொடர்பு இருந்தபடியே உள்ளது. அது...?'**

*வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான் ரவி. அவன் தாத்தா ஒரு ரிட்டையர்டு ஸ்கூல் டீச்சர். வீட்டில் சும்மா இருக்கப் பிடிக்காதவர். அவனது புதிய அப்பாச்சி பைக்கைத் தேய்த்துத் தேய்த்து அழகு பார்த்துக் கொண்டிருந்தார்.*

*ரவிக்கு தாத்தாவின் அந்த அக்கறை மிகப் பிடித்திருந்தது. தாத்தா இருந்தால் வீட்டில் ஒரு குப்பை இருக்காது. எப்பொழுதும் எதாவது செய்துகொண்டே இருக்க வேண்டும் என்று விரும்புகின்றவர் - அவனது தாத்தா அருணாச்சலம்! அதனால் ஒட்டடை அடிப்பது, தூசிகளைத் துடைப்பது, தோட்டத்தில் செடிகளுக்கு பாத்தி கட்டி தண்ணீர் விடுவது, எலெக்ட்ரிக் பில் கட்டுவது, காய்கறி வாங்கி வருவது, எல்.ஐ.சி. பிரிமியம், இன்சூரன்ஸ் பணம் என்று எல்லாவற்றையும் அவர் மட்டுமே பார்த்துப் பார்த்து செய்வார். அவருக்கென்று பென்ஷன் பணம் வருகிறது. ஆகையால் யாரையும் டிபெண்ட் பண்ணி வாழ அவருக்கு அவசியமில்லாமல் போய்விட்டது. ரவிக்கு தாத்தா ஒரு ரோல் மாடல்.*

வயதாகிவிட்டது என்று திண்ணையில் படுத்துத் தூங்காமல், சதா இருமிக் கொண்டிராமல் சுறுசுறுப்பாக அவர் இருப்பதால் அவரை எல்லோருக்குமே பிடித் திருந்தது. தெருவிலும் அவருக்கு நிறைய நண்பர்கள். அவருக்கு ஓர் ஆசை.

ரவியின் 'அப்பாச்சி'யை அவர் ஓட்டிக்கொண்டு தெரு வழயாகப் போகவேண்டும். அதை அவரது நண் பர்கள் பார்க்க வேண்டும். கண்டிப்பாகப் பின்னால் ரவி அமர்ந்திருக்க வேண்டும்.

ஆபீஸ் புறப்பட்டுவிட்ட ரவி ஹெல்மெட்டுடன் வண்டி அருகே வந்து நிற்கவும் தாத்தாவைப் பார்த்து ஒரு சிரிப்பு சிரித்தான்.

"ரவி... ஆபீஸ் கிளம்பிட்டியா?"

"ஆமாம் தாத்தா... வண்டியை துடைச்சு தந்ததுக்கு ரொம்ப தேங்கஸ் தாத்தா..."

"வெறும் தேங்க்ஸ் மட்டும்தானா?"

"வேற என்ன தாத்தா வேணும்?"

"இந்த பைக்கை நான் ஓட்டணும். நீ என் பின்னால உட்கார்ந்துகிட்டு வரணும்."

"தாத்தா..."

"பயப்படாத... நான் அந்தக் கால ராஜ்தூத் மோட்டார் பைக்கெல்லாம் ஓட்டினவன்."

"ஆனா தாத்தா உங்களுக்கு இப்ப என்ன வயசுங் கறது மறந்து போச்சா?"

"டேய்... என் வயசைச் சொல்லி என்னைக் கட்டிப் போட நினைக்காதே. வண்டிய தருவியா, மாட்டியா...?"

“பயமா இருக்கு தாத்தா...”

“பயந்தா நீ என் பேரனே இல்லடா...”

“அய்யோ தாத்தா- எனக்கு டயமாகிகிட்டே இருக்கு.”

“நான் லேட் பண்ணலை. நீதான் டிலே பண்றே. இப்பக்கூட சொல்லு... நான் உன்னை உன் ஆபீஸ்ல விட்டுட்டு வரேன்.”

“வேண்டாம்... வேண்டாம்... சரி. வண்டிய ஸ்டார்ட் பண்ணுங்க.”

ரவி அழுது வடிந்தான். அவரோ துள்ளி குதித்தார். ஒரே உதை, வண்டி ஸ்டார்ட் ஆகிவிட்டது. அழகாக கியரை மாற்றினார். அவனும் ஏறி அமர்ந்தார். பைக் புறப்பட்டது.

“தாத்தா பார்த்துப்போ தாத்தா... பார்த்துப்போ...” என்று பின்னால் இருந்து பல்லவி பாடிக்கொண்டே வந்தான். ஆனால் தாத்தா சிட்டாட்டம் வண்டியை ஓட்டினார். தெருமுனையில் மூக்குப்பொடி விற்கும் கடை ஒன்று உள்ளது.

கச்சிதமாக அதன் அருகில் இறங்கிக்கொண்டு அவனுக்கு டாடா காட்டினார்.

“தாத்தா... நீ ரொம்ப டிஃப்ரண்ட்டான கேரக்டர் தாத்தா...” என்றபடியே ரவியும் பைக்கில் பறக்கத் தொடங்கினான். அவன் மனசெல்லாம் தாத்தாதான் நிரம்பியிருந்தார். அவர் வாழ்க்கை ஒரு பரிபூரணமான வாழ்க்கையாக அவனுக்குத் தோன்றியது.

ஆரோக்யமான உடம்பு, நல்ல வேலை... நல்ல சம்பளம்... நல்ல பாட்டி. ஆனால் பாட்டி மிக இளம்

வயதிலேயே (45) தாத்தாவை விட்டுப் போய்விட்டாள். அதுகூட தாத்தா சுயமாக எல்லா வேலைகளையும் அவரே செய்துகொள்ளக் காரணமாக அமைந்துவிட்டது. தாத்தா எந்த ஒரு விஷயத்தையும் எதிர்மறையாக பார்ப்பதே இல்லை. அதேசமயம் எல்லா விஷயத்தையும் மிக ஸ்போட்டிவ் ஆக எடுத்துக் கொள்வார்.

ரவி, தாத்தா பற்றின எண்ணத்திலே அப்படியே புதைந்து போய்விட்டான்.

விதி சமயங்களில் இப்படித்தான் தன் வேலையைக் காட்டும். தாத்தா பற்றிய எண்ணங்களுடன் பயணித் தவனுக்கு எதிரே வந்த ராட்சஸத்தனமான அமெரிக்கன் லாரி ட்ரக் ஒன்றின் பக்கவாட்டு அடைப்பு சரியாகக் கண்ணில் படவில்லை. சில அடி இடைவெளியில்தான் அதைப் பார்த்தான். சுதாரித்து வண்டியை ஒடித்துத் திருப்புவதற்குள் அந்த அடைப்பு பாகத்தில் அவனது அப்பாச்சி ஒரே முட்டாக முட்டி அவனையும் தூக்கி வீசப் பார்த்தது.

அதன்பின் நடக்கக்கூடாத அவ்வளவும் நடக்கத் தொடங்கிவிட்டது!

அந்த தார்ச்சாலை மேல் ரவி எழுப்பிய சப்தம் நெடுந்தூரத்துக்குக் கேட்டது!

**ஹா**ஸ்பிட்டல்!

ரவியின் அவ்வளவு உறவினர்களும் வந்து சேர்ந்து விட்டனர். அரை மனசாக வந்திருந்தார் ராமதுரை. அவரோடு அழுதபடியே அகிலா. சீதாலட்சுமி அவளை விடாமல் தேற்றிக்கொண்டே இருந்தாள். ரவி

இன்டென்சிவ் கேரில் கிடத்தப்பட்டிருந்தான். ஆக்சிஜன் சுவாசம் செயற்கையாக அவனுக்கு அளிக்கப்பட்டிருந்தது. காலில்தான் பெரிய கட்டு! அதைக் கண்ணாடி டோர் வழியாகப் பார்த்த அகிலா பெரிதாக வாய்விட்டே அழுதாள். ராமதுரை அந்தச் சூழலில் இருந்து நழுவி டாக்டரின் அறையில் இருந்தார்.

"டாக்டர்... ரவி என் வருங்கால மாப்ளை... உயிருக்கு ஒண்ணும் ஆபத்து இல்லையே..."

"சாரி மிஸ்டர் ராமதுரை... அவர் இப்படி இருக்கறதுக்கு பேசாம செத்துப்போயிடலாம்."

"வாட்...?"

"ஆமாம் சார். ஒரு கால் டோட்டலா போயிடிச்சு. அவர் இனி காலமெல்லாம் நொண்டி!"

"மைகாட்..."

"ஸ்பைனல் கார்ட்தான் ஒரு மனுஷனோட சூப்பர் சிஸ்டம். அந்த சிஸ்டமே பிரேக் ஆகியிருக்கு. கால் இல்லேன்னாலும் கட்டக்கால் வெச்சு நடந்துட முடியும். ஸ்பைனல் கார்ட் சிஸ்டம் பிரேக் ஆனா படுத்த படுக்கைதான்..."

டாக்டர், ராமதுரையை ஏராளமான அளவிற்கு பயமுறுத்தினார். ராமதுரைக்குள்ளும் ஒரே பதற்றம். வெளிறிய முகத்தோடு வெளியே வந்தார். அதை சீதாலட்சுமியும் கவனித்துவிட்டு அவர் அருகில் வந்தாள்.

"என்னங்க?"

"என்னத்தச் சொல்ல... ஹும்."

"டாக்டர் என்ன சொன்னார். அதைச் சொல்லுங்க முதல்ல."

“அவர் என்னத்த சொல்வார். எல்லாம் முடிஞ்சு போயிடிச்சுன்னு சொன்னார்...”

“அய்யோ... என்னங்க சொல்றீங்க?”

“சீதா... உன் மருமகன் இனி எப்பவும் ஒரு நொண்டி. அது மட்டுமில்ல. அவன் எழுந்து நடக்கறதும்கூட அசாத்யம்.”

“நிஜமாவா?”

“கண் எதிர்க்க பார்க்கறேல்ல... அப்புறம் என்ன சந்தேகம் உனக்கு?”

“செலவு பண்ணாக்கூடவா ரவியை நடக்க வைக்க முடியாது.”

“இதோ பார்... கையோ காலோ போனா போனது தான். கண்ணு, கிட்னி மாதிரி உறுப்பு இது இல்லை. என் வரைல அவன் கதை முடிஞ்சு போச்சு. நீ முதல்ல நம்ப அகிலாவைக் கூட்டிக்கிட்டுக் கிளம்பு.”

“அகிலா அவனுக்கும் உதவியா இங்கேயே இருக் கேன்னு சொல்றாங்க...”

“பைத்தியக்காரி... அவதாண்டி இங்கே இருக்கக் கூடாது. இங்க அவ இருக்க இருக்க அவன்பேர்ல அனுதாபம் அதிகமாகும். ஏற்கெனவே இரண்டுபேரும் பசை போட்டு ஒட்டிக்கிட்டு அலையறாங்க. இதுல அவனுக்கு இப்படி ஆயிட்டது தெரிஞ்சா அவ அவனை விட்டு இனிப் பிரியவேமாட்டா...”

“அது நல்லதுதானேங்க...”

“முட்டாள்தனமாவே பேசறே நீ... அவன் ஏழை, சம்பளம் கம்மிங்கறதைக் கூட நான் பொருட்படுத்தாம

சொந்தம்கற காரணத்துக்காக ஒத்துக்கிட்டேன். ஆனா ஒரு நொண்டியை, படுத்த படுக்கையா கிடக்கப் போறவனை மருமகனாக்க எந்த அப்பனும் ஒத்துக்க மாட்டான். கல்யாணம் பண்ண முதல்ல அவன் மேடைல உக்காரணும். அதுக்குக்கூட முடியாத நிலைல இருக்கற அவனுக்கு ஒரு கல்யாணம் தேவையா சீதா...”

ராமதுரையின் கேள்வி நியாயம் சீதாலட்சுமியின் தலையை அமுக்கியது. கண்களில் கண்ணீர் திரண்டு விட்டது. அகிலாவிடம் இதை எல்லாம் சொல்லி அவளை எப்படிச் சமாளிக்கப்போகிறோம் என்பது தெரியாமல் குழம்பினாள். தாத்தா அருணாச்சலம் தூர இருந்தபடி ராமதுரை பேசுவதையும் சீதாலட்சுமி மறுத்துப் பேசுவதையும் பார்த்துக்கொண்டுதான் இருந்தார். ஒரு முடிவோடு அவரும் மெல்ல அவள் அருகில் வந்தார்.

“அப்பா...”

“அழாதே சீதா... மாப்ளை பேசினது என் காதுலையும் விழுந்துச்சு. அவர் சொல்றதுலையும் நியாயம் இருக்குல்ல?”

“என்னப்பா நீங்களும் இப்படிப் பேசறீங்க. ரவிக்கும், அகிலாவுக்கும் நிச்சயமே முடிஞ்சாச்சு. இப்ப அவன் விபத்தைக் காரணம் காட்டி நாங்க ஒதுங்கினா அது எவ்வளவு பெரிய சுயநலம் தெரியுமா?”

“அப்படி எல்லாம் இல்லம்மா- நல்லவேளை கல்யாணத்துக்கு முந்தி இப்படி ஒரு விபத்து நடந்துச்சுன்னு நினை. கடவுள் இப்பக்கூட, ‘தப்பிச்சுக்குங்’கன்னு சொல்றதாதாம்மா இதுக்கு அர்த்தம்?”

“இல்லப்பா... ரவிக்கு இப்ப உடம்புக்குதான் ஆக்சி டெண்ட் நடந்திருக்கு. நாங்க ஒதுங்கிப் போய் அவன் மனசுக்கும் ஒரு ஆக்சிடெண்ட் நடக்கணுமாப்பா...”

“அதுக்கென்னம்மா பண்ண அவன் அதிர்ஷ்டம் அவ்வளவுதான்.”

“இந்த நிலைல அவனைப் பார்த்துக்க ஒருத்தர் வேணாமா?”

“நான் எதுக்கும்மா இருக்கேன். இனி இந்த தாத்தா தான் அவனுக்கு...”

அருணாச்சலம் எந்தவித படபடப்பும் தவிப்பும் இன்றி தெளிவான சிந்தனையோடு பேசினார். ராம துரையும் அகிலாவை - அவள் வரமாட்டேன் என்று சொல்லச் சொல்ல இழுத்துச் சென்றபடி இருந்தார்.

## 4

“காற்றுக்கும் காலத்துக்குமான தொடர்பு மிக விசித்திரமானது... சற்று விஞ்ஞான பூர்வ மானதும்கூட... வெட்டவெளியில் பரவிக் கிடக்கும் காற்று காலை, மதியம், மாலை, இரவு என்று பொழுதுகளுக்கேற்பத் தன்னுள் ஈரப்பதத்தைக் கூட்டிக் குறைத்துக் கொள்கிறது. இதனால் நாமும் எப்பொழுதும் ஒரேபோன்ற தன்மையுடைய காற்றை சுவாசிப்பதில்லை. அடுத்து, வெளியில் காற்றில் நிலவும் அழுத்தம் மற்றும் அன்றைய நட்சத்திர கிரக நிலைகளுக்கேற்ப நிலவும் அலை வரிசைகள் ஆகியவையும் கலந்து கிடக்கின்றன. நாம் சுவாசிக்கும்போது நம் சுவாசத்துக்குள் இவை அனைத்தும் உள்சென்று நம் ரத்தத்தில் கலந்து நாடி நரம்புகளில் எல்லாம் பரவுகிறது. நாமும் ஒரே சிந்தையாக உறுதியான எண்ணங் களோடு எப்பொழுதும் இருப்பதில்லை. நம் எண்ணங்களில் மாற்றம், கலைதல் போன்றவை நிகழ்காலச்சூழலே காரணம். அந்தக் காலச்சூழல் காற்று வழியாகத்தான் நம்முள் புகுந்து நம் உடம்பிலும் நிறைகின்றது. இந்த நுட்பமான உண் மையைக் கண்டறிந்த சித்தர்கள் சுவாசிப்பதில்தான் எல்லாவித நன்மை தீமைகளும் மாறிமாறி நடக் கின்றன என்பதை உணர்ந்து சுவாசப் பயிற்சிகளால் வெளிக்கால நிலை எப்படிப்பட்டதாக இருப்பினும் மனசை பாதிக்காதபடி பார்த்துக்கொண்டனர்.

மூன்று மாதங்கள் வரை ஓடிவிட்டன. யார் செய்த புண்ணியமோ ஸ்பைனல் கார்டு பிரச்சினையில் இருந்து தப்பித்துவிட்டான் ரவி. அவனால் எழுந்து உட்கார முடிந்தது. செயற்கைக் கால்களுடன் பாத்ரூம் போய்வர முடிந்தது. ஆனால் ஓடியாடத்தான் இனி எந்தக் காலத்திலும் முடியாது என்று கூறிவிட்டனர். அவன் வேலை செய்த ஆரத்தி கார்ப்பரேஷன் நிறுவனமும் அவனை வேலையில் இருந்து நீக்கிவிட்டது. அவனுக் கான செட்டில்மென்ட் தொகையோடு சற்று கூடுதலாக ஒரு காம்பன்சேஷன் தந்து ரவியை கைகழுவிவிட்டனர்.

அவனைச் சுற்றி நடந்த எதுவுமே ரவிக்குத் தெரி யாது. தாத்தாதான் அவன் அருகில் இருந்து அவனை பார்த்துக்கொண்டார். அகிலாவை ராமதுரை அனுப்பித் தராததை வைத்து அவனே ஓரளவு புரிந்துகொண்டு விட்டான். மூன்று மாதமாக படுத்த படுக்கையில் கிடந்த தால் உடம்பும் பாதியாகிவிட்டது. ஆனால் தாத்தா அதைப் பார்த்தெல்லாம் கவலையே படவில்லை. அவனிடம் எப்போதும் போலத்தான் பேசினார். அன்றைக்கு புதிய உடையோடு ஆஸ்பத்திரிக்கு வந்த அவரைப் பார்த்தவனுக்கு ஒரே ஆச்சரியம்!

“தாத்தா என்ன இன்னிக்கு புது டிரெஸ்?” என்று கேட்டான்.

“டிரெஸ் எப்படி இருக்கு?”

“சூப்பரா இருக்கு...”

“இது கல்யாண டிரெஸ் ரவி.”

“கல்யாண டிரெஸ்ஸா...?”

“ஆமாம் ரவி. நீ அதிர்ச்சியடையாதே. இன்னிக்கு அகிலாவுக்குக் கல்யாணம். அதான் உன் அத்தை, கல்யாணத்துக்கான டிரெஸ்ஸா இதை எடுத்துக் கொடுத்தா...”

தாத்தா ஒரு சாதாரண சேதியைச் சொல்வது போலத்தான் சொன்னார். அவனுக்கு திம்மென் றிருந்தது. அப்படியே அவரை வெறித்தான். கண் ணிரண்டும் கலங்கி நீர் ஊற ஆரம்பித்துவிட்டது.

“கலங்காதே ரவி... இது எதிர்பார்த்ததுதான். அகிலா உன்னை ஏமாத்திட்டான்னும் நினைக்காதே. பாவம் அவ. நாங்கல்லாம்தான் அவளை இன்னொரு கல்யா ணத்துக்குக் கஷ்டப்பட்டு சம்மதிக்க வைத்தோம்.

உன் வாழ்க்கைப் போராட்டம்கறது இனி தனி!

இதுல நீ யாரையும் சேர்த்துக்கக் கூடாதுங்கறது என் எண்ணம். தாத்தா நான்கூட இன்னும் கொஞ்ச நாள்தான் உன்கூட இருப்பேன். அதுக்குள்ள நீ சுயமா நிக்கத் தயாராகணும்...”

தாத்தா மிகவே அழுத்தமாகச் சொன்னார். ரவி அவரையே வெறித்தான்.

“உனக்கு ஏற்பட்ட விபத்தை நினைச்சு நீ கவலைப் படாதே. சந்தோஷப்படு. என்னடா இப்படி தாத்தா சொல்றாரேன்னும் நினைக்காதே. இரண்டு காலும் நல்லா இருக்கும்போது நடக்கறதோ, ஓடுறதோ பெருசு இல்லை. ஆனா அப்படி இல்லாதப்ப நீ நடந்தா அது தான் பெருசு. அதேமாதிரி உன்னால இனியும் வேலைக்குப் போய் நிறையவே சம்பாதிக்க முடியும். அது மட்டுமல்ல,

அகிலா மாதிரி ஒரு பொண்ணையும் நீ கல்யாணமும் செய்துக்க முடியும்.

'என்னடா... தாத்தா சர்வ சாதாரணமா இந்த விஷயங்கள பேசறாரே'ன்னு நினைக்காதே. ஹெலன் கெல்லர் செய்த சாதனைகளைப் பற்றி நீ கேள்விப் பட்டே... மிரண்டுபோயிடுவே. காது கேட்காது, கண் தெரியாது, வாயும் பேச முடியாது அவங்களால.. ஆனா அவங்கதான் பெரிய சாதனையாளர்! ஹெலன் கெல்ல ரோட ஒப்பிட்டா நீ ஏராளமான சக்திகளை உடை யவன். நீ கொஞ்சம் முயற்சி செய்தாலும் போதும் உன்னால எல்லா காரியங்களையும் நல்லவிதமா - நீ நல்லா இருந்த காலத்தில் செய்த மாதிரியே செய்ய முடியும். நீ செய்வே.." - தாத்தா அவனுக்கு நம்பிக்கையும் அளித்தார். ரவியும் தாத்தாவைக் கண்ணீர் புரளும் விழிகளுடன் பார்த்தான். தாத்தா என்னதான் உற்சாக மளித்தாலும் அகிலா தன்னை விட்டுப் போய்விட்டாள் என்பது அவனை உறுத்திக்கொண்டேதான் இருந்தது.

அவள் இன்னொருவனைத் திருமணம் செய்து கொள்ள சம்மதித்த விஷயம் ஆச்சரியத்துக்கெல்லாம் ஆச்சரியமான ஒன்றாக இருந்தது. கண்ணிரண்டும் சரசரவென்று நீரைப் பொழிந்தபடியே இருந்தன.

தாத்தா அதைத் தடுக்கவில்லை.

"நான் சொல்றத கேட்டு உடனே மனதை திடப் படுத்திக்க. நீ ஒண்ணும் யோகி இல்ல ரவி. எல்லா ஆசாபாசங்களும் உள்ள ஒரு மனிதன் நீ. அதுலையும் இளைஞன் ஆகையால உன் மனசு கிடந்து குமுறலாம்.

குமுறட்டும்.

நல்லா குமுறட்டும்.

ரவி... ஒண்ணு சொல்றேன் நல்லா கேட்டுக்கோ. அழாத. திட உள்ளம் ஒரு வகைல பாறை மாதிரி. அழற நெகிழ்வான உள்ளம்கறது ஆத்தோரத்து பூமி மாதிரி... பாறைல திடம் இருக்கலாம். ஆனா, அதுல எதுவும் வளராது. ஆத்தோரத்து பூமி அப்படி இல்ல... அதுல எல்லாமே வளரும். உன் மனசும் அப்படியே இருக்கட்டும். நெகிழ்ந்து அழு! அது ரொம்ப நல்லது.

"இந்த வலிதான் உனக்கு வலிமை தரும்."

தாத்தா அருணாச்சலம் அவன்வரையில் ஏதோ ஒரு திட்டத்தோடும் தீர்மானத்தோடும்தான் பேசுகிற மாதிரி இருந்தது.

அப்போது ரவியின் அம்மா திலகமும் அப்பா ராஜவேலுவும் அங்கு வந்தனர். அவர்கள் கைகளில் திருமணத் தாம்பூலப் பை.

இருவர் முகமும் செத்து சவம்போல இருந்தது.

திலகம் ரவியைப் பார்க்கவும் - உடைந்து போய் அழுதேவிட்டாள். ராஜவேலுவின் கண்களிலும் கண்ணீர். தூர இருந்து ஒரு நர்ஸ் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

அவளுக்குத் தாத்தா அருணாச்சாலம் சாதாரணமாக இருப்பது ஆச்சரியமளித்தது. அவரிடமே அதை கேட்கவும் செய்தாள்.

"எப்படிங்க உங்களால இவ்வளவு மோசமான நிலைலயும் திடமா இருக்க முடியுது?"

"இருக்கணும்மா. இருந்தாதான் என் பேரனை நான் கரை சேர்க்க முடியும். அடுத்து என் வயசுக்கு என் அனுபவத்துக்கு நான் கலங்கக்கூடாது. ஏன்னா... இன்னிக்கு நீ பார்க்கற இந்த கஷ்டமெல்லாம் நிரந்தரம் கிடையாது."

"அப்படின்னா?"

"எல்லாம் மாறும். மாறிகிட்டே இருக்கறதுதானே வாழ்க்கை."

"இனி என்ன மாறி என்னங்க பிரயோஜனம்? இழந்த காதலி திரும்பக் கிடைப்பாளா... இல்ல போன வேலை தான் திரும்பக் கிடைக்குமா? புதுசா ஆயிரம் கிடைச்சாலும் போனது போனதுதானேங்க?"

"அப்படின்னு நீ சொல்றே... ஆனா நான் வேறவிதமா நினைக்கறேன். எனக்கு தெரிஞ்சு நல்லா இருந்தவங்க சாதிச்சதைவிட ஊனமையானவங்க சாதிச்சதுதான் அதிகம். நல்லா இருக்கற ஒருத்தன் 'இன்னிக்குப் போனா என்ன... நாளைக்குப் பாத்துக்கலாம்'கற நம்பிக்கைல வாழ்க்கைல வாய்ப்புகளை நழுவ விட்டுக்கிட்டே இருப்பான். வாய்ப்புங்கறதும் எப்பொழுதாவது வர்றதுதானே? அது அவனுக்கும் தெரியாம இல்லை. இருந்தாலும் நல்லாதானே இருக்கோம்கற மமதை அவங்கள அப்படி நினைக்க வைக்கும். ஆனா, ஊனமுற்றவர்களோ தங்களை நோக்கி வர்ற சின்ன வாய்ப்புகளைக்கூட பெரிசா நினைப்பாங்க. கெட்டியா பிடிச்சுக்கிட்டு அதுல 'மேக்ஸிமம்' திறமையைக் காட்டுவாங்க. அதனாலதான் சொல்றேன். என் பேரன் நிச்சயம் இனி வரப்போற நாட்கள்ல பெருசா சாதிப்பான் பார்."

தாத்தாவின் அந்த நம்பிக்கையான பேச்சு அவள் வரையில் ஒரு ஆச்சரியத்துக்கெல்லாம் ஆச்சரியமான விஷயம்.

தாத்தாவையே அவள் வியப்பாக பார்த்துக் கொண் டிருந்தாள். ரவியும் அவன் அப்பா அம்மாவும் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு அழுதுகொண்டிருந்தனர். அதில் ரவியின் அப்பா ராஜவேலு, "நீ ஒரு அதிர்ஷ்டக் கட்டைடா... நீ ஒரு அதிர்ஷ்டக் கட்டை..." என்று பலமாகச் சொன்னது மட்டும் அவன் காதில் நன்கு எதிரொலித்தது.

ஆறு மாதம் ஓடிவிட்டது!

ரவி டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கும் போய்விட்டான். காலில் முட்டிக்கு மேல் அவனுக்கு செயற்கைக் கால் தான் பொருத்தப்பட்டிருந்தது. அந்தக் காலை மாட்டிக் கொண்டு நடப்பது பெரும்பாடாக இருந்தது. தொடைப் பரப்பெல்லாம் அந்த செயற்கைக் காலின் மேல்பாகம் அழுத்தி ரத்தம் கட்டிக் கொண்டது. எனவே தரையில் செயற்கைக் காலுடன் காலை ஊன்றி நடக்கவே ரவி பயந்தான். ஆனால் தாத்தா விடவில்லை. "தைரியமா நட ரவி... முதல்ல வலிக்கத்தான்செய்யும். அப்புறம் போகப் போக சரியாயிடும். உம் நட.... நட...." என்று அவனைத் தூண்டித் தூண்டிவிட்டார். அவன் நடக்கும் போது அருகில் நின்று தன் தோள்களைத் தந்து அதைப் பிடித்துக்கொள்ளச் செய்து அவனுக்கு உதவினார்.

"உம்... அப்படித்தான்... அப்படியேதான்... நட.... நட...." என்றார். அப்படியே நடந்து வாசல் பக்கம் வந்தபோது

அவனது ஆக்சிடெண்ட் ஆன அப்பாச்சி பைக்.... புதிய பளபளப்போடு காத்திருந்தது.

"தாத்தா இது...?"

"உன்னோட ஆக்சிடெண்ட் ஆன பைக்தான்..."

"அந்த பைக்கா..."

"அதே பைக்தான் ரவி. நீதான் இன்ஷ்யூர் பண்ணியிருந்தியே. ஆகையால வண்டிக்கான ரிப்பேர் செலவை அவங்க கொடுத்துட்டாங்க."

"இருந்தாலும் இது ராசியில்லாத பைக் தாத்தா. என்னையும் அகிலாவையும் பிரிச்ச பைக். இதைப் போய்..."

"போடா பைத்தியக்காரா... ஒண்ணு நல்லா தெரிஞ்சுக்கோ. நல்லா இருக்கற ஒருத்தரோட நமக்கு எந்த வேலையும் கிடையாது. ஏன்னா அவர்தான் நல்லவராச்சே-? ஆனா தப்பா ஒருத்தர் இருந்தா அவரைத்தான் நாம முதல்ல கவனிக்கணும். தப்பானதை அப்படியே விட்டுடக்கூடாது. அது இன்னொரு இடத்துக்குப் போகட்டும்னு ஒதுங்கிப்போறதும் பொறுப்பில்லாத சுயநலமாகும்."

"தாத்தா நான் இருக்கற நிலைல உங்க பேச்சைக் கேட்டா எனக்கு சிரிப்புதான் தாத்தா வருது. வாழ்க்கைல ரிஸ்க் எடுக்கற நிலையிலையா நான் இருக்கேன்?"

"கரெக்ட்... இப்பத்தான் நீ சரியான கேள்வி கேட்டுருக்கே. நீ ரிஸ்க் எடுக்கற நிலைலதான் இருக்கே. ஏன்னா உன் வரைலதான் நீ மத்தவங்க மாதிரி செயல்

பட முடியாதே. ஆகையால நீ ரிஸ்க் எடுத்தாதான் உனக்கு லைஃப்."

"தாத்தா... எப்படிப் பேசினாலும் இப்படி எதாவது ஒரு பதில் சொல்றீங்களே தாத்தா..."

"ரவி- நீ பழைய மாதிரியே இந்த அப்பாச்சி பைக்கை ஓட்டிக்கிட்டு தெருவுல போகணும். உன்னால போக முடியும். இந்த 'ராசியில்லாத ஒண்ணு'ங்கற உன் எண்ணத்தை தூக்கிப் போடு. ராசியில்லாததை ராசி யாக்கிக் காட்டு. உனக்கு உன் கம்பெனில திரும்பவும் வேலை தரணும். அது நீ போய் அவங்க முன்னால தைரியமா நின்னு கேக்கறதுல இருக்கு. உன்னைப் பார்த்து உன் தன்னம்பிக்கையைப் பார்த்து அப்படியே உங்க கம்பெனி ஆபீசர்ஸ் பிரமிச்சுப் போகணும்..."

தாத்தா அவனுக்கான கனவுகளை தன் கண்களில் ஏந்திப் பிடித்து அவன் எதிரில் காண்பித்தார். அப்படியே அந்த பைக்கை ஸ்டார்ட் செய்தவர்.

"வா ரவி... என் பின்னால உக்காரு" என்று கிளம்பி விட்டார்.

"எங்க தாத்தா கிளம்பிட்டீங்க..."

"வா... எவ்வளவு நாள்தான் வீட்லையே அடைஞ்சு கிடப்பே...?"

தாத்தாவோடு அவனும் பைக்கில் பயணப்படத் தொடங்கினான். தாத்தா சீரான வேகத்தில் பைக்கை செலுத்தினார். அவன் அவரது தோள்களை இறுகப் பிடித்துக் கொண்டான்.

“தைரியமா உக்கார்... போகும்போதுதான் நான் ஓட்டுவேன். வரும்போது நீ ஓட்டணும்...”

“ஐயோ தாத்தா... எதுக்கு இந்த விஷப் பரீட்சை.”

“சாதாரண பரீட்சையை சாதாரணமானவங்க எழுதட்டும். நீ விசேஷமானவன். ஆகையால விஷப் பரீட்சையை நீ எழுது. தப்பில்ல...”

அருணாச்சலம் தாத்தா அவனோடு பேசும்போது ஒரு இடத்தில்கூட ஜகா வாங்கவில்லை. அவன் ‘முடியாது’ என்று சொல்லும் எல்லா இடங்களிலும் ‘முடியும் முடியும்’ என்றுதான் சொன்னார். ஒருவிதத்தில் அவர் சொல்வதும் சரிதான். ஆஸ்பத்திரியில் காலை இழந்து கிடந்தபோது ‘இனி அவ்வளவுதான் - கதை முடிந்துவிட்டது. என்றுதானே நான் நினைத்தேன். ஆனால் இன்று ஒரு மோட்டார் பைக்கில் முன் போலவே போனபடி உள்ளேன். தாத்தா இல்லா விட்டால் இந்த மாற்றம் ஏது? இந்த தைரியம்தான் ஏது?’ ரவி தனக்குள் கேட்டுக்கொண்டே பைக்கில் பயணித்தபடி இருந்தான். தாத்தாவும் அன்று அவன் சென்ற அதே பழைய மகாபலிபுரம் சாலையில் ஓடத் தொடங்கியிருந்தார்.

# 5

'மழை பொழிவதும், பிள்ளை பிறப்பதும் எப்போது என்று யாருக்கும் தெரியாது என்பார்கள். இதைத்தான் 'மழை பெய்யறதெப்போ, மகவு பிறக்கிறதெப்போன்னு மகேசனும் அறியான்' என்று பழமொழியாகக் கூறுவர்.

உண்மைதான்.

இதேபோல ஒருவருக்கு எந்த பிள்ளை பிறக்கும், அது ஆணா, பெண்ணா என்பதும் நம் கைகளில் இல்லாத விஷயங்களே!

ஆனால் தேர்ந்த சித்த ஞானம் உள்ளவர்கள் இம்மட்டில் ஆண்பிள்ளை வேண்டும் என்றால் அதற்கான வழிமுறையையும், பெண்பிள்ளை வேண்டுமென்றால் அதற்கான வழிமுறையையும் கண்டறிந்து வைத்திருந்தனர்.

மூச்சுக்காற்றில் இடகலை சுவாசநாள் எப்போது, பிங்கலை சுவாசநாள் எப்போது நிகழும் என்பதற்கு ஒரு கணக்கு உள்ளது. இதில் வலது மூக்கில் காற்று ஓடும் நாளில் புணர்ச்சி செய்பவர்க்கு ஆண்மகவே பிறக்கும் என்பது ஒரு விளைவு.

சுவாசம் என்பது இப்படி இனத்தையே தீர் மானிக்கும் ஒன்றாகவும் உள்ளது. அதேபோல

**'ரிஷ்யஸ்ருங்கர்' என்று ஒரு ரிஷி இருந்தார். அவர் எங்கு வந்தாலும் அங்கே மழை பெய்யும். இதனால் வறண்டு மழை பொய்த்த ஊர்களுக்கு புராண காலத்தில் ரிஷ்யஸ்ருங்கரை அழைப் பார்கள். அவரும் போய் காலடி பதிப்பார். உடனேயே மழை பெய்யும். இது ஒன்றும் மாயா ஜாலமில்லை. இதற்குப் பின்னால் ஓர் ஊரே ஒன்றுபோல சுவாசிக்கும் ஒரு நிகழ்வுதான் ஒளிந்துள்ளது. அது எப்படி?**

*தாத்தா பைக்கில் போய்க்கொண்டே இருந்தார். ரவிக்கு தடுக்கவே தோன்றவில்லை. சொல்லி வைத்த மாதிரி அவரது ஓட்டம் அதிர்ஷ்டப் பொன்னியம்மன் கோயில் உள்ள மண்சாலைப் பக்கம் திரும்பியது. அந்த நொடி அவனுக்குள் அகிலா தன் பின்னால் அமர்ந் திருப்பது போலவும் அவன்தான் அந்த பைக்கை ஓட்டு கிற மாதிரியும் கூட இருந்தது. அதேவேகத்தில் அவனிடம் கண்ணீரும் பீறிட்டது. விசும்பி விசும்பி அழ ஆரம் பித்துவிட்டான். தாத்தா பைக்கை நிறுத்தினார். காலை ஊன்றி நின்றபடியே ரியர் மிர்ரர் வழியாக அவன் அழுவதைப் பார்த்தார்.*

*"ரவி... திடீர்னு ஏன் அழுவறே?"*

*"சாரி தாத்தா... நீங்க இந்த பக்கமா வரவும் எனக்கு பழசெல்லாம் ஞாபகம் வந்துடுச்சு."*

*"பழசெல்லாம்னா...?"*

*"எனக்கு ஆக்சிடெண்ட் ஆகறதுக்கு முதல்நாள் நான் அகிலாவோட இந்தப் பக்கம் வந்திருந்தேன்.*

இங்க அதிர்ஷ்டப் பொன்னியம்மன் கோயில்னு ஒரு கோயிலும் இருக்கு...”

“அப்ப இப்ப நாம அந்த கோயிலுக்குப் போறோம்.”

“வேண்டாம் தாத்தா. வண்டிய திருப்புங்க. அங்க போனா நான் அழுறதோட - கோபத்துல அந்த சாமி சிலையை உடைச்சாலும் உடைச்சிடுவேன்.”

“சாமி மேல எதுக்குப்பா இப்படி ஒரு கோபம்?”

“பின்ன என்ன தாத்தா- இந்த அதிர்ஷ்டப் பொன்னி பெரிய கருணை உள்ளவளாம். அதிர்ஷ்டத்தை வாரி வாரி தர்றவளாம். நானும் அகிலாவும்கூட அதை நம்பி விழுந்து கும்புட்டோம். ஆனா என் அதிர்ஷ்டம்தான் இப்ப உங்களுக்குத் தெரியுமே? எங்க இரண்டு பேரையும் கைவிட்ட இந்த சாமி முகத்துல விழிக்கறதுகூட பாவம் தாத்தா...”

ரவி கொந்தளித்தான் - குமுறினான்.

தாத்தா அவன் குமுறலைக் கூர்ந்து கவனித்தார். அவருக்குத் தெரிந்து எந்த ஒரு தெய்வமும் கைவிட்டதாக வரலாறு கிடையாது. கடவுள் என்றாலே உள்ளே கிடப்பவர் அதாவது நமக்குள் கிடப்பவர் என்பதுதான் பொருள். நம்முள் கிடப்பவர் எப்படி நமக்கே எதிரியாக முடியும்? தாத்தா கூர்மையாக யோசிக்கவும் ஆரம்பித்து விட்டார்.

“என்ன தாத்தா யோசனை... கிளம்புங்க” தாத்தா.

“இரு ரவி. நீ அவசரப்படாதே...”

“நீங்க என்ன சொல்றீங்க தாத்தா...”

“தெய்வம் எப்பவும் தன்னை நம்புனவங்களைக் கைவிடாதுப்பா.”

"என்னைக் கைவிட்றுச்சே...?"

"அப்படின்னு நீ சொல்றே... ஆனா நான் வேற மாதிரி யோசிச்சுப் பாக்கறேன்."

"இதுல மாத்தி யோசிக்கவும் மாறாம யோசிக்கவும் என்ன தாத்தா இருக்கு?"

"கொஞ்சம் பேசாம இரு. உன் வயசுக்கே உண்டான குமுறலைத் தாண்டி ஆழமா உன்கிட்ட ஒரு விஷயம் இல்ல. இது ஆழமா பார்க்க வேண்டிய ஒரு விஷயம்..."

இருவரும் தர்க்கம் பண்ணிக்கொண்டிருக்கும் போதே அன்றைக்கு அவன் பார்த்த பூசாரி வந்துவிட்டார்.

ரவியை அவருக்கு முதலில் அடையாளமே தெரிய வில்லை. ஆனால் அவனோ அவரை கப்பென்று பிடித்தான்.

"என்ன பூசாரி... என்னைத் தெரியல...?"

"தெரியல தம்பி... பார்த்தமாதிரியும் இருக்கு, பார்க்காத மாதிரியும் இருக்கு."

"அதுசரி... அப்ப என்னைப் பார்த்தப்போ நான் நல்லா சிகப்பா ராஜா மாதிரி இருந்தேன். இப்பத்தான் ஆஸ்பத்திரில கிடந்து துரும்பா இளைச்சு எலும்புக் கூட்டுக்கு சட்டை போட்டது மாதிரி ஆயிட்டேனே... எப்படித் தெரியும்?"

அவன் பதில் சொன்னவிதம் பூசாரியைக் கொத்தியது.

"ஓ... நீங்கதான் கோயில் பூசாரியா?" - இது தாத்தா.

"ஆமாங்கய்யா... இப்பத்தான் கோயில் கதவைத் திறக்க போய்க்கிட்டு இருக்கேன்..."

"நல்லது... நாங்களும் வர்றோம்..." என்று தாத்தா பூசாரியோடு பைக்கில் பின்தொடர்ந்தார்.

"தாத்தா! நீங்க நான் எது சொன்னாலும் அதுக்கு போட்டியாவே எதையும் செய்யணும்னு நினைக்க றீங்க..."- ரவி திரும்பவும் புலம்ப ஆரம்பித்தான்.

"பேசாம வா ரவி... உனக்கு நல்ல காலம் ஆரம்பிச் சாச்சு. முதல்ல புலம்பலை விடு..."

"எப்படித் தாத்தா புலம்பாம இருக்க முடியும். போன தடவை வந்தப்போ எப்படி ராஜா மாதிரி வந்தேன் தெரியுமா? இப்ப பாருங்க... நான் பைக் ஓட்டி நீங்க உக்காந்துகிட்டு வரணும். ஆனா இங்க எல்லாமே தலை கீழால்ல இருக்கு?"

"டேய்... தப்புதப்பாவே யோசிக்கிறே நீ... ஃபாரீன்ல 'மாத்தி யோசிக்கிறது'ன்னு ஒரு கான்சப்ட் இருக்கு. மாத்தி யோசிக்கறதுன்னா எப்படின்னு தெரியுமா உனக்கு?"

"நீங்கதான் இப்ப எனக்கு புதுசு புதுசா எதாவது சொல்லிக்கிட்டே இருக்கீங்களே- நீங்களே சொல்லுங்க-"

"ஒருத்தர் இறந்துட்டா உடனே நாம அவரை பிரிஞ் சிட்டதா நினைச்சு அழறோம். மாத்தி யோசிக்கற கான்சப்ட்படி ஒருத்தர் இறந்துட்டா உடனே நாம சந்தோஷப்படணும்."

"அது எப்படித் தாத்தா முடியும்?"

"சில விஷயங்களைப் புரிஞ்சிகிட்டா முடியும். எதையும் எங்க இருந்து எப்படி பாக்கறோம்கறதுலதான் ரவி இருக்கு. ஒருவர் இறந்துட்டா 'அவரை உண்மைல நாம பிரியல. இறந்தவர் தன் உடம்பைத்தான் விட்டு விலகினார். மற்றபடி அவர் ஆத்மா நம்மை சுத்திக்கிட்டுத்

தான் இருக்கும். ஆகையால ஆத்மாவோட நட்பு நமக்குக் கிடைக்குது'ன்னு நினைக்கணும். அடுத்து, 'என்னிக்கு இருந்தாலும் ஒருநாள் நாமளும் சாகத்தான் போறோம். அவர் கொஞ்சம் முந்திகிட்டு போயிருக்கார். அவ்வளவு தான் வித்யாசம். நம்மை முந்திப்போன அவர் சொர்க்கத்துல நமக்காகக் காத்துகிட்டிருப்பார்'னு நினைக்கணும். இதெல்லாம்தான் மாத்தி யோசிக்கற விஷயங்கள்."

தாத்தாவின் வியாக்யானம் பூசாரியின் காதுகளிலும் விழுந்தது. அவர் முகத்தில் ஒரு குறுநகை பரவியது. ஒருகட்டத்தில் அவரும் தாத்தாவுக்கு சாதகமாகப் பேசினார்.

"சரியாக சொன்னீங்கய்யா... எங்க அதிர்ஷ்டப் பொன்னி ஆத்தா அன்னிக்கு உக்காந்த இடத்துல பட்டினி கிடந்தே உயிரை விட்டப்போ அதை ஒரு அநியாயமான சாவாத்தான் எல்லாரும் நினைச்சாங்க. ஆனா அப்படி அன்னிக்கு ஆத்தா சாவாட்டி இன்னிக்கு நமக்கு ஒரு கோயில் கிடைச்சிருக்குமா?"

பூசாரியின் பதில் தாத்தாவைப் புளகாங்கிதமடையச் செய்துவிட்டது.

"பூசாரி.. கரெக்டா சொன்னீங்க! நான் சொன்னதை நல்லபடியாவும் புரிஞ்சிகிட்டீங்க. உண்மைல நீங்க ஒரு கற்பூரம் பூசாரி... கற்பூரம்."

"ஐயோ... பெரிய வார்த்தைங்க நீங்க சொல்றது. இந்த சமயத்துல ஒண்ணு மட்டும் சொல்லிக்கிறேங்க. தம்பி இங்க வந்துட்டுப் போனபிறகு அதுக்குக் கால் போய் கஷ்டம் வந்துருக்குன்னா உண்மைல அதுக்குப் பின்னால வேற ஒரு விஷயம் இருக்குங்க. அது என்னன்னு எனக்கு சொல்லத் தெரியலைங்க. ஆனா ஒண்ணு உறுதி,

எங்க அதிர்ஷ்டப் பொன்னி யாரையும் கைவிடமாட்டா. எப்ப இவருக்குப் பிரியமே இல்லாத நிலையிலையும் இவருக்கு இங்க வரணும்னு இருக்கோ அப்பவே இவருக்கு விதி நல்லா இருக்குன்னுதான் அர்த்தம்...”

“நிச்சயமா. நான் அதை மனப்பூர்வமா நம்பறேன். ஆனா இவனுக்குதான் எதுலேயும் அவசரம். ஆழம் போதமாட்டேங்குது.”

தாத்தாவும் பூசாரியும் கருத்தளவில் ஒன்று சேர்ந்துவிட்டார்கள். கோயிலும் வந்துவிட்டது. சுற்றிலும் பனைமரங்கள். நடுவில் சிறியதாக ஒற்றை கோபுரத்துடன் ஒரே ஒரு சந்நிதியுடன் அதிர்ஷ்டப் பொன்னியம்மன் கோயில். ஆர்ப்பாட்டம், ஆடம்பரம் என்று எதுவுமே இல்லாத அமைதியான சந்நிதி. பூசாரி கதவைத் திறந்து கொண்டு உள்ளே போய் முதல் காரியமாக விளக்குதான் ஏற்றினார். பக்கவாட்டு சுவரில் மொழுமொழுவென்ற எண்ணெய்ப் பூச்சுக்கு நடுவில் ஒரு தகர டின்னில் விளக்கெண்ணெய்! அதைக் கொண்டுதான் விளக்கு போட்டார். உள்ளே கன்னங்கருப்பாய் ஒரு பெண் அமர்ந்திருப்பது போன்ற தோற்றத்தில் அதிர்ஷ்டப் பொன்னியம்மன். கழுத்தில் முதல்நாள் போட்ட மாலை இருந்தது. தாத்தா பார்த்துவிட்டுக் கன்னத்தில் போட்டுக் கொண்டார். ரவி கோயிலுக்குள் உள்ள அந்த சிலையை முறைத்துப் பார்த்துக்கொண்டு நின்றான்.

அவனுக்குள் கொஞ்சம்கூட பக்தியே இல்லை. பூசாரி அடுத்தடுத்து செயல்பட்டு இறுதியாக கற்பூரம் ஆரத்தி காட்டி முடித்துவிட்டு வெளியில் வந்தார். தாத்தா கண்ணில் ஒற்றிக்கொண்டார். ரவி திரும்பி நின்றுகொண் டான். பூசாரி அதை ரசித்துச் சிரித்தார்.

"சாமியோட எவ்வளவு வேணா சண்டை போட லாம் தம்பி. பக்தனுக்கு அந்த உரிமை உண்டு. அதுக் கெல்லாம் சாமி கோவிச்சுக்காது. ஏன்னா எல்லாமே அதுதான் செய்யுதுன்னு சொல்லும்போது கோபப்பட காரணமும் அதுதானே?"

"சரியா சொன்னீங்க பூசாரி... என் பேரன் கிடக்க றான் விடுங்க. நான் அவன் சார்பா இந்த அதிர்ஷ்டப் பொன்னிகிட்ட ஒண்ணுதான் கேட்பேன். என் பேரன் சந்தோஷமா அவன் ஆசைப்பட்டபடி வாழணும். அவன் ஒரு அதிர்ஷ்டக்கட்டைன்னு எல்லாரும் சொல்றாங்க. அதெல்லாம் இல்லைன்னு அவன் மேலயும் ஆத்தா ளோட 'அதிர்ஷ்டக் காற்று' வீசி அவன் அமோகமா இருக்கணும்" என்று பலத்த குரலில் சொன்னபடியே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார் தாத்தா. அப்பொழுது கடல் காற்றிடமும் திடீரென்று ஒரு வேகம். அது கோயில் முகப்பில் தொங்கிய மணியின்மேல் மோதி 'டணங்' என்று சப்தமிட்டது.

பூசாரியிடம் ஒரு சிலிர்ப்பு.

"ஐயா உங்க வேண்டுதல் நிச்சயம் பலிக்குங்க..." என்றார். ரவி சிரித்துவிட்டான். அவன் வரையில் காற்று பலமாக வீசினால் மணி ஆடும். ஆடினால் அது சப்தமிடும் இது இயற்கை! இதை அவனால் அதிர்ஷ்டப் பொன்னியின் ஒரு குரலாகக் கருத முடியவில்லை. அதுதான் அவன் வரையில் சிரிப்பு வந்துவிட்டது. அது தாத்தாவுக்கும் சரி, பூசாரிக்கும் சரி நன்றாகவே புரிந்தது. ஆனால் இருவருமே அதற்கொரு பதில் கூற பிரியப்படவில்லை. இனி அவன் காலத்தால் புரிந்து கொள்வதே சரி என்கிற முடிவிற்கு வந்துவிட்டனர்!

மணல் வெளிமேல் பைக் சாய்வாக நிறுத்தப்பட்டிருந்தது. தாத்தாவும் ரவியும் வந்து பைக்கை கிளப்பினர். தாத்தா ரவியைப் பார்த்து ஓட்டச் சொன்னார்.

"வேண்டாம் தாத்தா... என்னை வற்புறுத்தாதீங்க."

"இல்லை நீதான் ஓட்றே... உம் ஓட்டு..."

"தாத்தா..."

"ஓட்டுடா..."

அவர் அதட்டி ஸ்டார்ட் செய்து தரவும் அவனும் ஏறி அமர்ந்தான். பைக்கும் வேகமெடுத்தது. சிறிது தூரம் போயிருக்கும். எதிரில் ஒரு பார்க்கக்கூடாத காட்சி!

அம்பாசிடர் வெள்ளை நிற கார் ஒன்று ஒரு மரத்தின் மேல் மோதிய நிலையில் காருக்குள் இருந்து ஒருவர் தூக்கி எறியப்பட்டு மயங்கிக் கிடந்தார். அவர் அருகில் ஒரு பிரீஃப் கேஸ்... அது திறந்து கிடக்க அதனுள் இருந்து தங்கக் கட்டிகள் வெளியே இறைந்து கிடந்தன. அவ்வளவும் ஹால் மார்க் தங்கக்கட்டிகள். இருபத்து நாலு காரட்! ஒரு கட்டி நூறு கிராம் எடையில் இருந்தது.

"தாத்தா..." என்றபடியே பைக்கை நிறுத்திய ரவி தனது ஊனத்தை மறந்து பைக்கில் இருந்து குதித்து கீழே கிடந்தவரை நோக்கி ஓடினான். தாத்தாவும் அவன் பின்னே ஓடினார். அவன் கீழே கிடந்தவரை குனிந்து தொட்டுப் பார்த்தான். நல்லவேளை மூச்சிருந்தது. தலையில் அடிபட்டு ரத்தப்பெருக்கு வேறு...

"தாத்தா இவர் சாகலை. உயிரோடதான் இருக்கார்..." என்றான். தாத்தா சமயோசிதமாகத் தங்கக்கட்டிகளை பொறுக்கி பிரீஃப்கேசில் போட்டு அதை மூடினார்.

"ரவி... அவரைத் தூக்கிக் கார்ல போடு... நீ கார் ஓட்டுவேதானே?"

"என்ன தாத்தா இது... இந்தக் கார் 'ஜாம்' ஆயிடிச்சு. இதை ஓட்ட முடியாது தாத்தா..."

"அப்ப பைக்கை ஸ்டார்ட் பண்ணு. இவரை பின்னால உட்காரவெச்சு நான் இவருக்குப் பின்னால உக்காந்து பிடிச்சுக்கறேன். ஒரு பைக்ல மூணுபேர் உக்காந்து ஓட்றது கஷ்டமாத்தான் இருக்கும். இருந்தாலும் வேற வழி தெரியல எனக்கு. என்ன சொல்றே?"

"நோ பிராப்ளம் தாத்தா... நீங்க சொல்றதுதான் சரி. வாங்க..."

அவன், அவர் சொன்னதுபோலவே தயாரானான். படுவேகம். பேண்ட் அணிந்திருந்ததால் அவன் கால்களில் ஒன்று கட்டைக்கால் என்றே தெரியவில்லை. அவனும் அந்த நொடியில் கால் நினைப்பிலேயே இல்லை.

ஒரு உயிரை எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும் என்கிற துடிப்பு அவனிடம்... தாத்தா அதை கவனித்தார். ஆனால் அப்பொழுதே உணர்த்தாமல் அவன் வேகத்துக்கு ஈடு கொடுக்கத் தொடங்கினார்.

சுற்றிலும் ஒரு மனிதர் என்றால் ஒரு மனிதர் இல்லை.

ஒரு கையில் தங்கக் கட்டிகளுடன் கூடிய பிரீஃப் கேஸ். நடுவில் அந்த மயங்கிய நபர்!

பைக் சீறியது.

வாழ்க்கை எப்பொழுது - எங்கே - எப்படித் திரும்பும் என்பது தெரியாது என்பார்கள் பெரியவர்கள்.

ரவி வரையிலும் கூட அப்படித்தான் நடந்து கொண்டிருந்தது.

# 6

'ரிஷ்யஸ்ருங்கர் அரிய வரங்களைப் பெற்றவர். அவர் காலடி படுகின்ற இடங்கள் செழித்துத் திளைக்க வேண்டும் என்பது அவர் விதிப்பாடு. எனவேதான் அவர் வரப்போகிறார் என்று தெரிந்த உடன் ஊர் மக்கள் அவ்வளவுபேருமே கிட்டத்தட்ட மழையே வந்துவிட்டதாக கருதத் தொடங்கிவிட்டனர். நூற்றுக்குத் தொண்ணூறு பேர் எவ்வாறு நினைக்கிறார்களோ அதுதான் எப்பொழுதும் வலிமையுடன் இருக்கும்.

தீபாவளிப் பண்டிகை வரப்போவதாக வைத்துக் கொள்வோம். அன்று எல்லாரும் கட்டாயம் புதிய உடை அணிந்து இனிப்பு உண்டு உல்லாசமாக இருப்பார்கள் என்று எண்ணுவோம். ஒரு மனிதக்கூட்டம் முழுவதுமே அப்படி எண்ணும் போது அதற்கேற்பவே அன்றைய தினமும் இருக்கும். அப்படி உறுதிப்பட ஒரு அணுத் துகளளவு சந்தேகமும் இன்றி ஒரு விஷயத்தை நம்பிச் செயல்படும்போது உடம்பில் இறுக்கம் தளர்ந்து சுரப்பிகளின் செயல்பாடுகளில் எல்லாம் அது எதிரொலிக்கிறது. அதற்கேற்பவே மூச்சுக் காற்றும் இருக்கும்.

சாதாரண நாட்களில் ஒவ்வொருவர் மூச்சுக் காற்றும் நல்லொருவிதமாக அவரவர் பிறந்த

**நேரப் புள்ளிக்கேற்ப அன்றைய நட்சத்திரம் மற்றும் ஹோரைக் கேற்பத்தான் இருக்கும். ஆனால் இப்படி ஊருக்கே பொதுமையான ஒரு விஷயத்தைக் கொண்ட நாட்களில் எல்லோர் மூச்சுக்காற்றும் ஒன்றுபோல நிகழும். இப்படி நிகழ்வதில்தான் அந்த விஷயத்தின் வெற்றியும் தோல்வியும் உள்ளன?**

**எப்படி?**

*புயல் வேகத்தில் ரவியின் பைக் பழைய மகாபலி புரம் சாலையில் பறந்து கொண்டிருந்தது. அதேசமயம் பார்வை எதாவது ஹாஸ்பிட்டல் கண்ணில் படாதா என்று பார்த்துக்கொண்டே வந்தது.*

*ஒரு இடத்தில் ஆஸ்பத்திரி போர்டு ஒன்று கண்ணில் படவும் பைக்கை கிறீச்சிட்டு நிறுத்தினான். தாத்தாவும் நிதானமாக இறங்கி அந்த விபத்தான மனிதரைப் பிடித்துக்கொண்டார். சாதுர்யமாக முன்புறமாக காலைத் தூக்கி இறங்கிய ரவி அவரைச் சட்டென்று தன் தோளுக்குத் தூக்கிக்கொண்டான். வழக்கம் போலவே நடக்க ஆரம்பித்தான்.*

*தாத்தா அவன் ஒரு சுமையுடன் சாதாரணமாக நடப்பதைப் பார்த்துக்கொண்டே அந்தத் தங்கக் கட்டிகள் கொண்ட பிரீஃப்கேசுடன் பின்தொடர்ந்தார்.*

*நல்லவேளை...*

*எதிரிலேயே டாக்டர் ஒருவர் வந்தபடி இருந்தார். அவரைத் தாத்தாவுக்கு நன்கு தெரிந்திருந்தது.*

"ஹலோ மிஸ்டர் அருணாச்சலம்?"

"அட... நம்ம சண்முகம் டாக்டரா...?"

"எங்க சார் இவ்வளவு தூரம்? ஆமா இது என்ன... ஆக்சிடெண்ட் கேஸா?"

"எக்ஸாக்ட்லி... சண்முகம்! உங்க கைவரிசையைக் கொஞ்சம் காட்டி இவரைப் பிழைக்க வைப்பீங்களா..."

"என்ன அருணாச்சலம் சார் இது கேள்வி. அது தானே எங்க கடமை..." அந்த டாக்டர் பேச்சோடு படுவேகமாக செயல்படத் தொடங்கினார்.

சரியான வேகம். சரசரவென்று ஒரு ஸ்ட்ரெச்சர் வந்தது. அதில் அந்த ஆக்சிடெண்ட் நபர் கிடத்தப் பட்டார். ஸ்ட்ரெச்சர் படுவேகமாக ஐ.சி.யு. நோக்கிச் சென்றது. அப்படிப் போகும்போதே டாக்டரிடம் விசாரிப்பு.

"அருணாச்சலம் சார்... யார் இவர்? எப்படி ஆச்சு இந்த விபத்து...?"

"தெரியாது டாக்டர். நாங்க கோயிலுக்குப் போய்ட்டு வர்ற வழியில அடிபட்டுக் கிடந்தார். பார்த்துட்டு எங்களுக்கென்னன்னு வர முடியல... அதான்!"

"ஆமாம்... உங்க வீட்லகூட யாரோ ஒரு பேரனுக்கு ஆக்சிடெண்ட் ஆகி கால்கூட போயிடிச்சின்னு கேள்விப் பட்டேனே..."

"அது... இதோ இவன்தான்..." தாத்தா ரவியைக் காட்டவும் டாக்டரிடம் திகைப்பு.

ரவிக்கும் அப்போதுதான் தன் கால் போன விஷயமே உறைத்தது.

அதற்குள் ஐ.சி.யு. வந்துவிட உடம்பு உள் நுழைந்தது. டாக்டரின் தலையும் மறைந்தது.

தாத்தா ரவி அருகே சென்று தீர்க்கமாகப் பார்த்தார். ரவிக்கும் தாத்தாவின் பார்வைக்கான காரணம் தெரிந்தது.

“ரவி.. ஒரு டாக்டருக்கே உன்னை ஒரு ஊனமுள்ளவனா பார்க்க முடியல. இப்ப என்ன சொல்றே?”

“உண்மைதான் தாத்தா... நானா இப்படி எல்லாம் நடந்துகிட்டேன்’னு எனக்கே ஒரே ஆச்சரியமா இருக்கு தாத்தா...”

“நீ அந்த நபரைக் காப்பாத்தணும்னு மட்டும் நினைச்சே. அதான் உனக்கு உன்னைப் பத்தின எண்ணமே இல்லாம போயிடுச்சு. உன்னையும் அறியாம உன்னோட பழைய வேகம் வெளிப்படவும் தொடங்கிடிச்சு.”

“ஆமாம் தாத்தா.. இப்ப எனக்கு மனசுக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?”

“பொறு... உள்ள போன நபர் பிழைச்சுக்கட்டும். அப்ப இன்னும்கூட சந்தோஷப்படுவோம்...”

“பிழைச்சுடுவாரா தாத்தா...?”

“எப்ப அந்த நபர் அடிபட்டுக் கிடந்த இடத்துக்கு நாம போகும்படி ஒரு அமைப்பு இருந்ததோ அப்பவே அவர் விதி ஸ்ட்ராங்குன்னு தெரிஞ்சுபோச்சு. உயிர் போகணும்னு இருந்திருந்தாதான் நாம வேற பக்கம் போயிருந்திருப்போமே? இல்ல கோயில்லையே உக்காந்திருப்போமே...?”

தாத்தாவின் அந்த விளக்கத்தில் ஓர் ஆழமான உள்கணக்கு இருப்பதும் அதுதான் ‘மாத்தி யோசி’ என்று

அவர் அடிக்கடி சொல்வதன் அடித்தளம் என்பதும் ரவிக்கு அப்பொழுதுதான் புரிந்தது.

"உண்மைதான் தாத்தா... இப்படி நடக்கற சம்ப வங்கள வெச்சே நாம நல்லது கெட்டதைக் கூட்டி கழிச்சு எடை போட்டுட முடியும்போல இருக்குதே..."

"இப்பத்தான் நீ காலத்தை கவனிச்சு புரிஞ்சுக்கவே ஆரம்பிச்சிருக்கே..." - என்ற தாத்தா அவன் தோளிலும் செல்லமாகத் தட்டினார். அப்போது அவர் செல் ஃபோனுக்கு ஒரு அழைப்பு. தாத்தா காதைக் கொடுத்த படியே ஒதுங்கிப் போனார். இங்கிதமாக ரவியும் ஐ.சி.யு. விற்கு வெளியிலேயே நின்றுகொண்டான். ஐந்து நிமிடம் கழித்துத் தாத்தா திரும்பி வந்தார். வந்தவர் முகத்தில் சுரத்தே இல்லை. அது ரவிக்கே கூட ஆச்சரியமளித்தது.

"தாத்தா... என்னாச்சு?"

"ஒண்ணுமில்ல ரவி... ஒண்ணுமில்ல."

"இப்படி சோகமா முகத்தை வெச்சுக்கிட்டு ஒண்ணு மில்லேன்னா நிறைய இருக்குன்னுதானே தாத்தா அர்த்தம்?"

"ரவி... தயவுசெய்து என்னை எதுவும் கேக்காதே. என் நண்பர் ஒருவர் இறந்துட்டார். நான் இப்ப அந்த துக்கத்துல இருக்கேன்."

"தாத்தா... நீங்க துக்கப்பட்ற அளவுக்கு அவர் யார் தாத்தா?"

"உனக்குத் தெரியாது... விடு!"

"தாத்தா! எதுக்கும் கலங்காத நீங்க கலங்கறீங்கன்னா அவர் ஒரு வேல்யபுள் பர்சனாதான் இருக்கணும்."

"ஆமாம் ரவி... ரொம்பவே வேல்யபுள் பர்சன். வயசான காலத்துல எனக்கு உன்னால ஒரு அடி விழுந்தது. உனக்கு விழுந்த அடியை என் அனுபவத்தைக் கொண்டு நான் நல்லபடியா மாத்த போராடிகிட்டு இருக்கும்போது இது அடுத்த அடி..."

"இப்ப என்ன தாத்தா... இந்த அடியையும் படியா மாத்திக்குங்க."

"மாத்திக்கத்தான் வேணும். அதிர்ஷ்டப் பொன்னி எப்படிப்பட்டவன்னு இப்பத்தான் எனக்குத் தெரியுது..."

"என்ன தாத்தா... உங்க நண்பர் மரணத்துக்கும், அதிர்ஷ்டப் பொன்னிக்கும் என்ன தாத்தா சம்பந்தம்?"

தாத்தா அதற்குமட்டும் பதில் கூறவில்லை. சிரித்தார்.

"எப்படியோ நார்மலாயிட்டீங்க. அது போதும் எனக்கு. அதேசமயம் அதிர்ஷ்டப் பொன்னி, துரதிர்ஷ்டப் பொன்னின்னுல்லாம் எதாவது பேசாதீங்க. அவளைப் பார்க்க வந்தாலே ஆக்சிடெண்ட்தான் போல இருக்கு."

ரவியிடம் ஒரு செல்லக் கோபம் வெளிப்பட்டது.

தாத்தா அதற்குமேல் அவனிடம் ஒரு வார்த்தை பேசவில்லை. கையில் அந்த பிரீஃப்கேஸ் கனத்தபடி இருந்தது.

ஒரு மறைவான இடமாகப் போய் அமர்ந்து பிரீஃப் கேஸை மெல்லத் திறந்து உள்ளே எதாவது முகவரி இருக்கிறதா என்று பார்த்தார்.

பிரதாப் - கோல்ட் மெர்ச்சண்ட் என்கிற பெயர்க் குறிப்பு. கீழே முகவரியும் கூடவே இந்திய அரசாங்கத்

திடம் தங்கம் வாங்கி விற்க லைசென்ஸ் உரிமை பெற்றவர் என்பதற்கான குறிப்புகளும் இருந்தன.

போன் நம்பரும் இருந்தது.

அடுத்த நொடியே அந்த எண்ணிற்கு செல்ஃபோன் மூலம் தொடர்பு கொண்டார்.

ரவியும் வந்து அருகில் அமர்ந்துகொண்டான்.

"யாருக்கு தாத்தா போன்?"

"அடிபட்டவருக்குத்தான்..."

"நம்பர் எப்படித் தெரியும்?"

"பெட்டில விசிட்டிங் கார்டு இருந்தது ரவி... பாரு..."- அவனிடமும் கார்டைக் காட்டினார்.

அதேவேளை அவர் செல்போன் லைனில் ஒரு பெண்மணியின் குரல்.

"மிஸஸ் பிரதாப் ஸ்பீக்கிங்... கோனோதும்?" என்று அந்தப் பெண்மணி ஹிந்தியில் விசாரித்தார்.

"மேடம்...! டு யூ நோ இங்கிலீஷ்..."

"ஐ நோ ஆல் லாங்வேஜஸ்... இன்க்ளூடிங் தமிழ்..."

"ஓ... அப்ப ரொம்ப நல்லதா போச்சு. நீங்கதான் பிரதாப்புங்கறவரோட மனைவியா?"

"ஆமாம். நீங்க யார்?"

"என் பேர் அருணாச்சலம். நான் இப்ப திருவான் மியூர் கே.கே. ஹாஸ்பிட்டல்ல இருந்து பேசறேன். உங்களுக்கு இந்த ஹாஸ்பிட்டல் எங்க இருக்குன்னு தெரியும்தானே?"

"நானும் திருவான்மியூர்தான்... என்ன விஷயம்க?"

"உங்க கணவர் பிரதாப்புக்கு ஒரு சின்ன ஆக்சி டெண்ட். உயிருக்கு பெருசா ஆபத்து இல்ல. வழியில பார்த்த நான் அவரை ஹாஸ்பிட்டல்ல சேர்த்துட்டு உங்களுக்கு போன் பண்றேன்."

"ஓ மை காட்... வித் இன் டென் மினிட்ஸ்... ஐ வில் பீ தேர்..." - அந்தப் பெண்மணி அலறி அடித்துக் கொண்டு வரத் தொடங்கினாள்.

"என்ன தாத்தா...?"

"புறப்பட்டு வர்றாங்க..."

"பரவால்ல தாத்தா.. சைலண்ட்டா பெட்டிய திறந்து விசிட்டிங் கார்டை எடுத்து விஷயத்தையும் சொல்லிட் டுங்க..."

"இது கிரிட்டிக்கலான ஒரு விஷயம் ரவி. இந்த நபர் ஒரு தங்க வியாபாரி. கோடிக்கணக்குல தங்கம் வாங்கி ஹோல்சேல்ல நகைக் கடைகளுக்கு விக்கற நபர்னு நினைக்கறேன்..."

"கார்டைப் பார்த்தா எனக்கும் அப்படித்தான் தெரியுது."

"இன்ஃபாக்ட் இவர் தங்கத்தோட வர்றத பார்த்துட்டு யாராவது எதிரிகள் இவர் காரை துரத்தியிருக்கணும். இவர் அவங்களை ஏமாத்தி நாம போன மண் பாதைல காரை விட்டுத் தப்பிக்கப் பார்த்திருக்கணும். அப்பத்தான் ஆக்சிடெண்ட்டும் ஆகியிருக்கணும்னு நான் நினைக் கறேன்."

தாத்தாவின் யூகத்தை ரவியும் ஆச்சரியத்தோடு ஏற்றுக்கொண்டான். டாக்டரும் உள்ளிருந்து வெளியில் வந்தார். அவர் முகத்தில் வெற்றிச் சிரிப்பு.

"என்ன டாக்டர்..."

"நோ பிராப்ளம். ரைட் டைம்ல ஆஸ்பத்திரியில சேர்த்துட்டதால மனுஷன் தப்பிச்சுட்டார். உண்மையாவே சொல்றேன்... இன்னும் பத்து நிமிஷம் கழிச்சு வந்துருந்தாலும் காப்பாத்தியிருக்க முடியாது. உடம்புல ரத்தம் தொண்ணூறு சதம் வெளியேறிடிச்சு. இப்ப ரத்தம்தான் கொடுத்துகிட்டு இருக்கோம்."

"எப்ப டாக்டர் அவர் கண் திறப்பார்?"

"நிச்சயமா பன்னிரண்டு மணி நேரத்துக்கு மேல ஆகும்."

"வாவ்... அதுவரைக்கும் நாங்க..."

"நீங்க கிளம்புங்க. நான் உங்களுக்கு போன் பண்றேன். அப்புறம்... இவர் யாரு என்ன ஏதுன்னு தெரிஞ்சிக்கணுமே."

"நோ பிராப்ளம். இவர் ஒரு தங்க வியாபாரி. பேர் பிரதாப். இவர் மனைவி இப்ப வந்துகிட்டே இருக்காங்க. அதிர்ஷ்டவசமா இவரோட விசிட்டிங் கார்டு கிடைச்சது. உடனே போன் பண்ணி சொல்லிட்டேன்" என்றார் தாத்தா. டாக்டர் முகத்தில் உடனே ஒரு பரவசம்.

# 7

'எப்பொழுதும் சீராக மூச்சுவிடும் போதுதான் மனத்தில் அமைதி ஏற்படும். மனம் வேறு அதன் அமைதி வேறல்ல. அதேபோல்தான் மனம் வேறு காற்றும் வேறல்ல. அதாவது மூச்சிருந்தால் தான் மனம். மனம் இருக்கிறது என்றால் மூச்சும் இருக்கிறது என்று பொருள். இதை மேலும் மேலும் ஆழமாகப் பார்க்கும்போது பல நுட்பங்கள் தெரிய வரும். எப்படி என்றால் ஒன்றேபோல மூச்சை இழுத்துவிடுவது, ஓரிடத்துக் காற்றை இழுத்துவிடுவது என்பதெல்லாம் பலர் கூடி இருக்கும் இடத்தில் மாத்திரமே நிகழும்.

ஒரு சினிமா தியேட்டருக்குள், நாடகசாலையில், தேர்த்திருவிழாவில் ஜனசமுத்திரம் கூடும் இடங்களைக் கூர்ந்து கவனித்தால் இந்த உண்மை புலனாகும். அங்கே எல்லோரும் ஒரு காட்சியில் தங்கள் கண்களைக் கொடுக்கும்போது ஒன்று போல சுவாசிப்பார்கள். அந்த இடத்துக் காற்றின் குணமும் அனைவருக்கும் பொதுவானது. ஒரே இடம், ஒரே மாதிரி சுவாசம், ஒரே சீரான தன்மை கொண்ட காற்று-இந்த மூன்றும் மனிதக் கூட்டத்தைக்கூட வெவ்வேறு வயதினராக இருந்தாலும் அமைதிப்படுத்தி விடுகிறது. இதிலிருந்து சுவாசிக்கும் முறைக்கும் அமைதிக்கும் தொடர்பு இருப்பதை உணரலாம்.

**இந்த உண்மை தெரிந்த யோகி தனக்குள் காற்றைக் கட்டும்போது மனமும் கட்டப்படுகிறது. அதனால்தான் யோகிகள் தனியே அமர்ந்து பிராணாயாமம், ஸோஹம் என்னும் மந்திர ஜெபம் முதலியவற்றைச் செய்து மனதை ஒரு நிலைப்படுத்தி ஒரு கட்டத்தில் அது இல்லாமல் போகும்படி சமாதியடைந்தனர்!**

“வெல்டன் அருணாச்சலம் சார். உங்களை ஒரு வயசான தாத்தான்னே யாரும் சொல்ல முடியாது. நீங்க எப்பவும் ஒரு யுத் மென்டாலிட்டியோடையே ஆக்டிவா இருக்கீங்க. வெல்டன்... வெல்டன்...” டாக்டர் பாராட்டி முடிக்க, மிஸஸ் பிரதாப் என்கிற - அவர் போன் செய்து தகவல் தந்த பெண்மணியும் படுபதற்ற மாக வாயில் புடவை முந்தியைப் பொத்திக்கொண்டு ஓடி வந்தபடி இருக்க...

“ஐ திங்க்... அவங்கதான்னு நினைக்கறேன்.”

“அப்படித்தான் தெரியுது. இருங்க அவங்களே பேசட்டும்.”

தாத்தா சொன்னது போலவே அவளே டாக்டரிடம் வந்து கேட்டாள்.

“டாக்டர்! இங்க மிஸ்டர் பிரதாப்னு ஒருத்தர் ஆக்சி டெண்ட் ஆகி அட்மிட் ஆகியிருக்காரா?”

“ஓ... நீங்கதான் மிஸஸ் பிரதாப்பா...”

“ஆமாம் டாக்டர். என் பேர் சசிரேகா. நான்தான் அவர் மனைவி. அருணாச்சலம்னு ஒருத்தர் போன் பண்ணி தகவல் கொடுத்தார்.”

"இவரேதான் அந்த அருணாச்சலம். நீங்க முதல்ல இவருக்குத்தான் நன்றி சொல்லணும்"

டாக்டர் பெருந்தன்மையாக அருணாச்சலத்தை நோக்கி கையைக் காட்டினார்.

"ஓ... நீங்கதானா போன் பண்ணினது. ரொம்ப தேங்க்ஸ்ஸ்ங்க..." என்றவள் தாத்தா கையில் பிரீஃப் கேஸைப் பார்த்து கண்களை அகட்டினாள்.

"இது அவர் பிரீஃப் கேஸ்தானே?"

"நிச்சயமா... முதல்ல நீங்க உள்ள போய் உங்க கணவர் முகத்தை ஒரு பார்வை பார்த்துட்டு வாங்க..."

தாத்தா அவளுக்கு ஒரு அமைதிக்கான வழியைக் காட்ட அவளும் ஐ.சி.யு.வுக்குள் வேகமாக அழைத்துச் செல்லப்பட்டாள்.

உள்ளே அவள் நுழைந்த சமயம் அந்த பிரதாப்பும் லேசாகக் கண் திறந்தார். டாக்டருக்கே வியப்பு! ஓடிச் சென்று ஆக்சிஜன் அளவைச் சீராக்கி கம்ப்யூட்டர் மானிட்டரையும் பார்த்தார். நல்ல முன்னேற்றம் தெரிந்தது.

"மேடம்... பயப்பட எதுவுமில்ல. அதுக்காக இப்ப நீங்க உங்க கணவரோட பேச முயற்சி செய்யறதும் நல்லது கிடையாது. ஆகையால தயவுசெய்து பார்த்துட்டு வெளிய போய் வெயிட் பண்ணா நல்லா இருக்கும்..."

டாக்டர் நாசூக்காக அவளுக்கு ஐ.சி.யூ. மெயின் கேட்டைக் காட்ட, அவளும் துளிர்த்துவிட்ட கண்ணீரோடு வெளியேறத் தொடங்கினாள்.

ஐ.சி.யு.வை விட்டு வெறியேறியவள் அடுத்து நேராக தாத்தாவிடம்தான் சென்று நின்றாள். அவள் வரவும்

தாத்தா பிரீஃப் கேஸை அவளிடம் நீட்டினார். அவளும் வாங்கிக் கொண்டாள்.

"மேடம்- உங்க கணவர் அடிபட்டு கிடந்த இடத்துல இந்த பிரீஃப் கேஸ் திறந்து கிடந்தது. உள்ள இருந்த கட்டி கட்டியா தங்க பிஸ்கட்டுங்க வெளியெல்லாம் சிதறிக் கிடந்தது. எல்லாத்தையும் எடுத்துப் போட்டு இதுலதான் வெச்சிருக்கேன். உங்க வீட்டுக்காரர் கண் முழிச்சாதான் இதுல எவ்வளவு தங்கம் இருந்ததுங்கற உண்மை தெரியவரும். பெட்டியில இருந்த விசிட்டிங் கார்டை எடுத்து நான் போன் செய்தேன். மற்றபடி எல்லாம் கரெக்டா இருக்காங்கறதை நீங்க பார்த்துட்டு சொல்லுங்க" என்று சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்தார் தாத்தா. அவளும் ஓர் ஓரமாக அமர்ந்து பெட்டியைத் திறந்து பார்த்தாள். தங்கக் கட்டிகளையும் வரிசைப்படுத்தி அடுக்கி எண்ணி முடித்தாள்.

மொத்தம் நூறு கட்டிகள். பத்து கிலோ எடை. அவள் மடி கனத்து அமுங்கியது. உள்ளே பிரதாப் என்னும் அந்த மனிதரின் பாஸ்போர்ட் முதல் எல்லாமே பத்திரமாக இருந்தது.

பிரீஃப் கேஸை மூடிய அந்தப் பெண் நெகிழ்வோடு திரும்பி தாத்தாவைப் பார்த்தாள்.

"என்னம்மா...?"

"மொத்தம் 10 கிலோ தங்கம் இப்ப இதுல இருக்கு.

பாண்டிச்சேரில ஒரு வியாபாரிகிட்ட கொடுக்க இவரே கார்ல புறப்பட்டுப் போனார். நான்தான் எங்க வீட்டு சேஃப்டி லாக்கர்ல இருந்து 100 தங்க கட்டிகளை இதுல வெச்சேன். எல்லாம் கரெக்டா இருக்கு."

"அப்ப இனி நீங்க கேர் எடுத்துக்கறீங்களா... நானும் என் பேரனும் கிளம்பறோம்."

"சார் உங்களுக்கு ரொம்ப பெரிய மனசு. இவரைக் காப்பாத்தி ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணினதுக்கும் ரொம்ப ரொம்ப நன்றி சார்..."

"நன்றிகளை இதோ என் பேரன் ரவிக்கு சொல்லுங்க. ஏன்னா ஒரு கால் இல்லாத நிலையிலயும் இவன்தான் உங்க புருஷனை தோள்ல சுமந்து அப்புறமா ஆஸ்பத்திரிக்கும் கூட்டிகிட்டு வந்தவன்."

"ரொம்ப ரொம்ப நன்றி தம்பி... உங்களுக்கு நான் ரொம்பவே கடமைப்பட்டிருக்கேன் தம்பி." அவள் நெகிழ்ந்து பொங்கினாள்.

"இருக்கட்டும்மா... அப்ப நாங்க புறப்பட்றோம்."

"ஒரு நிமிஷம்..." அவள் அவர்களை தடுத்து நிறுத்தி விட்டு திரும்பி நாலு பக்கமும் பார்த்தாள். பிறகு மெல்லிய குரலில்.

"சார்... நீங்க மட்டும் போலீசுக்குப் போயிருந்தா இவர் நிலை ரொம்ப தர்மசங்கடமாயிருக்கும். ஏன்னா இந்தத் தங்கத்தை விலைக்கு கேட்ட பார்ட்டிங்க ஒரு தப்பான பார்ட்டிங்க. முதல்ல இவரு அவங்களுக்கு தங்கம் கொடுக்க முடியாது. ஸ்டாக் இல்லேன்னுதான் சொன்னார். ஆனா அவங்கதான் அதிக பணம் தர்றதாவும் ரொம்பவும் அவசியமா தேவைன்னும் சொன்னாங்க. ஆனா நான் அப்பவே சந்தேகப்பட்டு என் கணவர்கிட்ட 'இந்த பிசினஸ் வேண்டாம்'னு சொன்னேன். ஆனா இவரோ கேக்கலை. இப்ப பாருங்க... அனேகமா அந்த பார்ட்டிங்கதான் தங்கத்துக்காக

இவரைத் துரத்தியிருக்கணும். அப்பத்தான் ஆக்சி டெண்ட்டும் நடந்திருக்கணும்." அவள் சொல்லச் சொல்ல ரவி தாத்தாவைத்தான் பார்த்தான். தாத்தாதான் அவள் யூகத்தைக் கிட்டத்தட்ட இதேவிதத்தில் சொல்லி யிருந்தவர். தாத்தாவும் ரவியை 'எப்படி என் யூகம்' என்பதுபோலப் பார்த்தார்.

"சார்! நான் உங்களை என் அப்பாவாவே இப்ப நினைக்கறேன். உங்ககிட்டே நான் ஒரு உதவி கேட்க லாமா?" - அவள் விடுவதாக இல்லை.

"என்னம்மா?"

"இல்ல- எங்களுக்கு குழந்தைகள் கிடையாது. நானும் இவரும்தான். நான் வீட்டைப் பூட்டிக்கிட்டுதான் இப்ப வந்துருக்கேன். வீட்டுலையும் பாம்பே மார்க்கெட்ல வாங்கின பல கிலோ தங்கம் இருக்கு. எங்க வீட்டுக்கு ஒரு செக்யூரிட்டி கார்டையும் போட்ருக்கோம். இருந் தாலும் அங்க ஒருத்தர் இருந்தே தீரணும்."

"நீங்க என்ன சொல்றீங்க? நீங்க வீட்டுக்குப் போக ணுமா, இல்ல நாங்க போகணுமா?"

"ஆமாம் சார்... இந்தத் தம்பி எங்க வீட்ல, இவர் குணமாகி வீடு திரும்பறவரை இருக்க முடியுமா?"

அவள் எடுத்த எடுப்பில் அப்படி ஓர் உதவி கேட் பாள் என்று தாத்தாவும் சரி, ரவியும் சரி கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை.

அந்தக் கேள்வி முன்னால் திணறிவிட்டனர்.

"என்னங்க யோசனை- என் வாழ்க்கைல இவ்வளவு தங்கம் கைல கிடைச்சும் அதை அபகரிக்க நினைக்காம

என் கணவருக்கும் பெரிய உதவி செய்திருக்கற ஒருத்தரா தான் உங்களைப் பாக்கறேன்."

அந்த கோஷ்டி இப்ப என் வீட்டைச் சுத்தி சுத்தி வந்துகிட்டு இருப்பாங்க. இங்க இவர் இப்படி பேச்சு மூச்சு இல்லாம இருக்கறது மட்டும் தெரிஞ்சா போதும், அவங்க எந்த எல்லைக்கு வேணா போவாங்க..."

"உன் கஷ்டம் புரியுதும்மா... அதுக்காக எங்களை நீ இவ்வளவு தூரம் நம்பறது ஆச்சரியமா இருக்கு."

"வாஸ்தவம்தாங்க. கடவுள் எங்களுக்கு வாரிசு களைத் தரலை. சொந்தக்காரங்களோடையும் மனஸ் தாபம். என் கணவர் ஒரு நேர்மையான வியாபாரி. ஆனா... தங்கம் வியாபாரம் செய்யறவங்கள்ல சிலர் அப்படியும் இப்படியும்தான் இருக்காங்க. நான் என்னங்க பண்ணட்டும்."

"சரிம்மா- 'உன் விருப்பத்துக்கு சம்மதிக்க முடியாது. எங்களுக்கு வேற வேலை இருக்கு'ன்னு சொன்னா என்ன பண்ணுவே?"

"தலை எழுத்தேன்னு கேட்டுப்பேன். வேற என்னங்க பண்ணட்டும்?"

அவள் பெட்டியை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு திரும்பவும் பொல பொலவென்று கண்ணீர் விட்டாள். தாத்தாவுக்குப் பாவமாக இருந்தது. ரவியும் சரி என்று சொல்லிவிடுவோம் என்கிறமாதிரி தாத்தாவைப் பார்த்தான்.

'நொண்டிக் காலோடு வீட்டில் படுத்துக் கிடப்பதற்கு இந்தக் காவல் உத்யோகம் ஆயிரம் மடங்கு மேல்'

என்றுதான் அவனுக்கும் தோன்றியது. தாத்தாவோ தன் உள் மனசுக்குள் 'தாயே அதிர்ஷடப் பொன்னி... நீ ஆனாலும் சூப்பர்மா. என் பேரன் இப்ப வீட்டுக்கு வந்தா பல உண்மைகள் தெரியவந்து அவன் நொறுங்கிப் போகற ஒரு நிலைலதான் இப்ப என் வீடு இருக்கு. இந்த நிலைலு இவனுக்கு வேற ஒரு வீட்டைக் காட்ற உன் அனுக்ரகத்துக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போறேன்?'

தாத்தா மனசுககுள் நெகிழ்ந்துபோய் கண்களை மூடிக்கொண்டார்.

கண்களைத் திறந்தவர் "சரிம்மா... என் பேரன் உங்க கூடவே இருப்பான். அவனை உங்களை நம்பி விட்டுட்டுப் போறேன். பாத்துக்குங்க. நான் அப்பப்ப வந்து பாத்துக்கறேன்.

"ரவி... நீ இவங்களுக்கு எல்லாவித உதவியையும் செய்து கொடுத்துட்டு மிஸ்டர் பிரதாப் பரிபூரணமா குணமான பிறகு வந்தா போதும். உன் அப்பா அம்மா கிட்ட நான் சொல்லிக்கிறேன்" என்றார்.

"தாத்தா நீங்களும் இருங்களேன்..."

"இல்லப்பா.. அதான் என் நண்பர் ஒருத்தர் இறந்துட்டார்னு சொன்னேனே. அவர் உடம்பைப் பாக்கற வாய்ப்பு இப்ப உருவாகியிருக்கு. நான் அதுக்குப் போய்ட்டு வரேன்..."

தாத்தா சொன்ன அந்தப் பாய்ண்ட் மிக மிக வேலிடான பாய்ண்ட். அதன்பின் ரவி எதையும் பேசவில்லை. மௌனமாகிவிட்டான். அந்தப் பெண் மணியும் நன்றிகளோடு கைகளைக் கூப்பினாள்.

மூன்று நாள்கள் கழிந்துவிட்டது. மிஸ்டர் பிரதாப் எழுந்து அமர்ந்த நிலையில் தன் மனைவியான சசி ரேகாவிடம் சகஜமாகப் பேசியபடி இருந்தார். அவளும் அவரிடம் ரவி பற்றியும், தாத்தா பற்றியும் சொல்லியிருந் தாள். ரவி வீட்டில் காவலில் இருப்பதையும் கூறினாள். பிரதாப் என்கிற அந்த மனிதருக்கு அவள் சொன்னது மகிழ்ச்சியாகவும் இருந்தது; சற்று பயமாகவும் இருந்தது.

"சசி... சீக்கிரமா நான் டிஸ்சார்ஜ் ஆகறதுதான் ஒரே வழி..." என்று அவர் சொல்லும்போது அதில் வீட்டுக் கவலை நன்கு தெரிந்தது.

"ஏங்க... அங்க வீட்ல எதாவது திருடு போயிரும்னு பயப்படறீங்களா?"

"அப்படி நினைக்காம இருக்க முடியல. யாருன்னே தெரியாத இரண்டு பேர் நேர்மையா நடந்துகிட்டதுக்காக வீட்டையும் அவங்களைப் பார்த்துக்கச் சொன்னது சரியில்லை சசி."

"எனக்கு வேற வழியே தெரியலை. உங்க நண்பர் களைக் கூப்பிட்டா இதுதான் சந்தர்ப்பம்னு நம்ம வியாபார ரகசியங்களைத் தெரிஞ்சிக்கப் பார்ப்பாங்க."

"அதுவும் சரிதான்... இருந்தாலும் எனக்கு மனசு கேக்கலை. இங்க நான் என்னைப் பாத்துக்கறேன். நீ முதல்ல வீட்டுக்குப் போ. அந்தப் பையன் இங்க வேணா இருக்கட்டும்."

பிரதாப் ஒரு டிஃபிக்கல் வியாபாரியாகவே பேசி னார். சசியும் சரி என்று தலை ஆட்டினாள். கச்சிதமாக தாத்தாவும் வந்தார். தாத்தாவிடம் விபூதிப் பிரசாதம்.

வந்ததும் முதல் காரியமாக அதை பிரதாப் நெற்றியில் இட்டார்.

"தேங்க்யூ சார்... பெரிய உபகாரம் எனக்குப் பண்ணி யிருக்கீங்க."

"அதெல்லாம் ஒண்ணுமில்ல மிஸ்டர் பிரதாப். உண்மைல கடவுள்தான் உங்களுக்கும் எங்களுக்கும் உதவிகிட்டு இருக்காரு..."

"அது என்னமோ உண்மைதான் சார். அன்னிக்கு என் பின்னால மட்டும் அந்த திருட்டுப் பசங்க தொடர்ந்து வந்திருந்தா என் தங்கமும் போய் என் உயிரும் போயிருக்கும். அவங்க என் தலைல கல்ல தூக்கிப் போட்டு கொன்னுட்டே போயிருப்பாங்க..."

"நீங்க நல்லா வாழணும்னு விதி இருக்கும்போது அதெல்லாம் எப்படிங்க நடக்க முடியும்...?"

"நீங்க சொல்றதுலயும் நியாயம் இருக்கு... ஆனா நல்லா இருக்கற விதி எதனால இப்படி ஒரு விபத்தைத் தரணும்?"

"விபத்தைத் தராட்டி எங்க சந்திப்பு உங்களுக்கு எப்படி ஏற்பட்டிருக்க முடியும்?"

"அப்ப நீங்க சொல்றபடி பார்த்தா காரணமில்லாம எதுவுமே இல்லைன்னு சொல்ல வர்றீங்களா?"

"நிச்சயமா... உண்மைல உங்க விபத்தால நினைச்சுப் பார்க்க முடியாத பல நல்ல விஷயங்கள் நடந்துருக்கு...!"

"நினைக்கப் பார்க்க முடியாத அளவுக்கா..? ஆச்சரியமா இருக்கே. அது என்னன்னு சொல்ல முடியுமா?"

"சொல்றேன்... இதுக்குப் பின்னால அந்த அதிர்ஷ்டப் பொன்னியம்மனும் இருக்கா..." என்ற தாத்தா ரவியின்

காதலில் தொடங்கி விபத்தில் அது முடிந்தது வரை கூறி நிறுத்தினார்.

அப்படியே 'இனி தன்னால் நடக்க முடியாது. தான் ஒரு செயலிழந்தவன்' என்று கருதிய அவன் அதை எல்லாம் மறந்து பிரதாப்பையே தோளில் தூக்கிக் கொண்டு பைக்கிலும் ஏற்றி ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து சேர்த்தது வரை கூறியபோது பிரதாப்புக்கும் அவர் மனைவி சசிரேகாவிற்கும் அப்படி ஒரு வியப்பு.

"இப்ப அவன் தன்னை ஒரு பழைய ரவியா உணர ஆரம்பிச்சுட்டான். அவன் ஆக்டிவா தொடரணும்னும் நான் விரும்பினேன். அதனாலதான் உங்க வீட்டுக்குக் காவலா அவன் இருந்தா நல்லா இருக்கும்னு உங்க மனைவி கேட்டுகிட்டப்போ நான் அவனை உடனே அனுப்பிக் கொடுத்தேன். அப்படி அவனை நான் அனுப்பி வெச்சதற்குப் பின்னால இன்னொரு சுயநலமும் இருக்கு..."

தாத்தா கொஞ்சம் இடைவெளி விட்டுவிட்டு பிரதாப்பையும் சசிரேகாவையுமே கூர்ந்து பார்த்தார்.

அப்படியே அவர் கண்களிலும் கண்ணீரின் சேர்க்கை. அதுவே அவர் மிகப்பெரிய ஒரு மன பாரத்தில் இருப்பதை அவர்களுக்கு உணர்த்தியது. அவராகவே என்ன அந்த சுயநலம் என்று கூறட்டும் என்பதுபோல மௌனமாக அவர்களும் அவரைக் கவனித்தார்கள்.

"எந்தப் பொண்ணு ரவியைக் கல்யாணம் பண்ணி கிட்டா கஷ்டப்படுவான்னு நினைச்சு அவளுக்கு வேற இடத்துல கல்யாணம் பண்ணி வெச்சோமோ அந்தப் பொண்ணு அகிலா போன இடம் எதிர்பாராத ஒரு நரகமா மாறிடிச்சு. அவளுக்குக் கல்யாணம் பண்ணி

வெச்ச அவ புருஷனுக்கு ரத்தப் புற்றுநோய்! அகிலா கல்யாணத்துக்குப் பிறகுதான் அந்த விஷயமே தெரிய வந்தது. டாக்டர்கள் கிட்ட காட்டினோம். அதிகபட்சம் இவர் ஆறுமாசம் உயிர் வாழ்ந்தா அதிகம்னு சொல்லிட்டாங்க. அதேபோலதான் ஆனது. என் பேத்தியோட புருஷன் ஒரு மூணு நாளைக்கு அதாவது நீங்க ஆக்சிடெண்ட்டுக்கு ஆளான அன்னிக்கு உயிரை விட்டுட்டான். இங்க நான் உங்களை அட்மிட் பண்ணிட்டு தவிச்சிகிட்டிருந்தப்போ அந்தத் தகவல் வந்தது. அதை ரவிக்கு சொல்லாம மறைக்கணும்னும் ரவிக்கு உருவான தன்னம்பிக்கை உடனேயே இடிஞ்சு போயிடக்கூடாதுன்னும் முடிவு செய்த நான் ரவியை உங்க வீட்டுக்கும் அனுப்பி வெச்சேன்.

நல்லவேளை... அந்த விஷயம் இப்ப கொஞ்சம் அடங்கிடிச்சு. இருந்தாலும் கடைசி வரை ரவிக்கு அகிலாவோட விஷயம் தெரியாம இருக்கறதுதான் நல்லதுன்னு நான் நினைக்கறேன். ரவி இப்ப பழையபடி நடமாடத் தொடங்கிட்டதால நான் அவனைக் கூட்டிகிட்டு என் சொந்த ஊரான மதுரைக்குப் போயிடலாம்னு பாக்கறேன். அங்க அவனுக்கு எதாவது ஒரு கடைகண்ணி வெச்சுக் கொடுத்தா அவனும் உக்காந்த இடத்துல அதிக அலைச்சல் இல்லாம வாழ்க்கையை ஓட்டிடுவான் இல்லையா?”

தாத்தா மனத்தில் உள்ளதை எல்லாம் - பை ஒன்றில் உள்ளதைக் கவிழ்த்துக் கொட்டுவதைப் போலக் கொட்டிவிட்டு ஒரு பெருமூச்சும் விட்டார்.

“பாவம் ரவி. இந்த வயசுல அவனுக்கு இவ்வளவு ஏமாற்றம் கூடாது” என்று அதற்கு ஒரு பதிலைச் சொன்ன சசிரேகா, தாத்தா எதிரிலேயே பிரதாப் காதில் ஏதோ கிசுகிசுத்தாள். பதிலுக்கு பிரதாப்பும் “நான் முதல்ல

வீட்டுக்கு டிஸ்சார்ஜ் ஆகி வந்துட்றேன் சசி. பிறகு நிதானமா இந்த விஷயம் பத்திப் பேசுவோமே" என்றார்.

அது என்ன விஷயம் என்று தாத்தாவும் கேட்கவில்லை. அவர்களும் கூறவில்லை.

தாத்தா மட்டும் "ரவி இப்ப இருக்கற சூழ்நிலைல உங்க வீட்லயே இருக்கட்டும். அதுல உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே" என்று கேட்டார்.

"கவலையே படாதீங்க... அவன் இனி எங்க புள்ள" என்றாள் சசி. அப்போது பிரதாப்பின் தலையணை அருகில் கிடந்த செல்போனிடம் ஒரு சிணுங்கல்.

பிரதாப்பே எடுத்து காதைக் கொடுத்தார்.

"தங்க வியாபாரி பிரதாப்தானே?"

"ஆமாம். நீங்க யார் பேசறது...?"

"நான் என்னை யார்னு இப்ப சொல்லிக்க விரும்பலை. ஆனா உங்களுக்கு ஒரு தகவலை மட்டும் தர விரும்பறேன். சுங்க இலாகா அதிகாரிகள்ங்கற பேர்ல ஒரு நாலு பேர் உங்க வீட்டை சோதனை போட எப்ப வேணா வரலாம். உண்மைல அவங்க அதிகாரிங்க கிடையாது. கணக்குல காட்டப்படாத - உங்ககிட்ட இருக்கற தங்கத்தைப்பத்தித் தெரிஞ்சுகிட்டு உங்களை மிரட்டிப் பணம் புடுங்கறதுதான் அவங்க திட்டம். நான் அவங்களோட எதிரி. அதனாலதான் இந்தத் தகவலை உங்களுக்குச் சொல்றேன். புத்திசாலித்தனமா அவங்க விஷயத்துல நடந்துகிட்டு தப்பிச்சுக்குங்க. அவ்வளவு தான் சொல்வேன்."

மறுபக்கத்துத் தகவல் - பிரதாப்பை அப்படியே நெம்பி நிமிர்த்தியது. சசிரேகாவும் ஏதோ விபரீதம் என்பதைப் புரிந்துகொண்டாள். தாத்தாவும்!

# 8

'ஒரு மனிதனின் வாழ்வில் நன்மை தீமைகள் நடப்பதற்குப் பின்னால் அந்த மனிதன் அதற்கு ஏதோ ஒருவகையில் காரணமாக இருக்கிறான் என்பது அடிப்படை விதியாகும். இந்தக் காரணத் தைத்தான் கர்மவினை என்கிறோம். கர்மவினை என்றாலே அது துன்பமானதாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. கர்மாவானது செய்கின்ற வினை அதாவது செயல்பாடுதான் கர்மவினை ஆகும். அது நல்லது செய்தால் நல்லதையும் தீயது செய்தால் தீயதையுமே தருகிறது. இதைத் தான் 'விதை ஒன்று போட்டால் சுரை ஒன்றா முளைக்கும்?' என்பார்கள். எதை விதைக்கி றோமோ அதையே அறுக்கிறோம். இந்த நல்லதும் தீயதும் எப்படி நம்மை அடைகிறது என்பதன் பின்னேதான் நுட்பமான - நம்பமுடியாத உணர மாத்திரமே முடிந்த விஷயங்கள் அடங்கிக் கிடக் கின்றன.

ஆம்!

நல்லதும் தீயதும் நமது சுவாசம் மூலமாகத் தான் நம்மை அடைகிறது. இந்த உலகத்திற்கும் நமக்கும் ஆன தொடர்பு காற்றால் ஆனது. வெளியே இருந்து நம் உள்ளே இதயம்வரை புகுந்துவிட்டு திரும்பச் செல்வது காற்று மட்டும் தான்!

**இது உள்ளே வரும்போது வெளியில் உள்ள தூசு தும்புகளை மட்டும் உள்ளே கொண்டு வருவதில்லை. கூடவே அந்தந்த பொழுதின் தட்பவெப்ப நிலையையும், நட்சத்திர கால அதிர்வு களையும் சேர்த்தேதான் கொண்டு வருகிறது. அவை அனைத்தும் இதயத்தில் குருதிக்குள் கலந்து உடம்பில் பயணித்து மூளைக்குள்ளும் நுழைகிறது. உடனே எண்ணங்கள் ஏற்பட்டு அதுவே மனமாய் செயல்படுகிறது. இந்த மனமானது ஒரு நிலையில் இல்லாமல் மாறிக்கொண்டே இருப்பதற்குக் காரணம் பொழுதுதான்!**

**நமக்கு வெளியே உள்ள காலப்பொழுதும் காலை மாலை மதியம் இரவு என்று ஒவ்வொரு நிமிடமும் மாறியபடியேதானே இருக்கிறது?**

*பிரதாப்பே அந்த விபரீதத்தைச் சொல்ல வாயெடுத் தார்.*

*“சசி... யார்னு தெரியல. ஒரு அனாமதேய கால். கஸ்டம்ஸ் ஆபீசர்ஸ் போர்வைல ஒரு நாலு பேர் நம்ம வீட்டை ரைட் பண்ண பிளான் பண்ணி இருக்காங் களாம். நம்ம கணக்கு வழக்கெல்லாம் சரியில்லைன்னு சொல்லி நம்மகிட்ட பணம் புடுங்கறதுதான் அவங்க திட்டமாம்.”*

*“மைகாட்... சொன்னது யார்?”*

*“அவங்களோட எதிரின்னு மட்டும் சொன்னான். இதை எந்த அளவுக்கு எடுத்துக்கறதுன்னு தெரியலியே...”*

*பிரதாப் கைகளைப் பிசைந்துகொண்டார்.*

"கவலைப்படாதீங்க மிஸ்டர் பிரதாப். ஃபார்ச்சு னேட்டா கஸ்டம்ஸ்ல என் அக்கா பேரன் ஆபீசரா இருக்கான். அவன் மூலமா நான் அந்த டிபார்ட் மெண்ட்டையே தெரிஞ்சுக்க முடியும். மேடம் நீங்க புறப்படுங்க. நானும் உங்ககூட வரேன். அவங்க வரட்டும். ரவியும் இருக்கான். நாங்க அவங்கள இரண்டுல ஒண்ணு பார்த்துட்றோம்..." என்றார் தாத்தா.

பிரதாப் படுத்த நிலையிலேயே கைகளைக் கூப்பி னார். மீண்டும் கண்ணீர் திரண்டுவிட்டது.

"சார்... கடவுள்தான் உங்களை என்கிட்ட கொண்டு வந்து சேர்த்திருக்கார்னு நினைக்கறேன். நான் கேக்கா மலே என் கஷ்டத்துல பங்கெடுத்துக்க வர்றீங்களே சார். உங்களுக்கு நான் எப்படி சார் நன்றி சொல்வேன்."

"மிஸ்டர் பிரதாப்... நீங்க உணர்ச்சி வசப்படாதீங்க. நான் மட்டும் உங்களுக்கு உதவலை. மறைமுகமா நீங்களும் எனக்கும் என் பேரனுக்கும் உதவிகிட்டுதான் இருக்கீங்க. சுருக்கமா சொல்லப்போனா நாம ஒருத் தருக்கு ஒருத்தர் ஆதரவா இருக்கோம்னு சொல்லலாம்"

தாத்தா பேசிக்கொண்டே எழுந்தார். "கிளம்புங் கம்மா... வரப்போற அந்த தடிப்பசங்க யார்னு ஒரு கை பார்த்துடுவோம்..." என்று சசிரேகாவையும் கிளப்பினார்.

"போ சசி... அந்த திருட்டுப் பசங்கள பிடிச்சு போலீஸ்ல கொடு. ஆஸ்பத்திரியில படுத்திருக்கும்போது கூட நிம்மதி இல்லாம பண்றாங்களே... அவங்களை என்னன்னு கேள்- புறப்படு-" - அவரும் தூண்டிவிட்டார். அவள் அரைமனதாகக் கிளம்பினாள்.

பிரதாப் வீடு நன்கு பெரிய வீடு. தங்கத்தில் வந்த காசு வீடு முழுக்க லக்சுரி ஐட்டங்களாய் மின்னிக் கொண்டிருந்தது. திரும்பின பக்கம் எல்லாம் ரோஸ்வுட் அடைப்புகள். தரையில் ஜெய்ப்பூர் மார்பிள், அடர்ந்த கறுப்பு நிறத்தில் வெளிச்சம் பட்டு திட்டுத் திட்டாய் ஜொலித்துக் கொண்டிருந்தது.

ஜெர்மன் சோபா செட். அமர்ந்தால் மெதுமைக்குள் புதைந்து போய்விட்டதுபோல் ஒரு சுகம்.

ஹாலிலேயே பெரிய சைஸில் 48 இஞ்ச் டி.வி. உள்குவிவாய் இல்லாமல் தட்டையாய் இருந்தது. கூரை மையத்தில் பிரேசியம் கிலாசில் விசேஷமாக செய்த் லஸ்தர் விளக்கு.

வீடு முழுக்கவே சென்ட்ரலைஸ்டு ஏர்கண்டிஷன் செய்யப்பட்டிருந்தது.

உள்ளே ஊட்டிக்குள் நுழைந்ததுபோல ஒரு சிலு சிலுப்பு. ஈசான்ய மூலையில் புல்லாங்குழல் ஊதும் கண்ணனின் உருவம். மிக நேர்த்தியான வேலைப்பாடு. கண்ணன் உயிரோடு நின்று இசைப்பதுபோல இருந்தது.

அவ்வளவிலும் மெய் மறக்காமல் சோபா ஒன்றில் லஸ்தர் விளக்கையே பார்த்தபடி அமர்ந்திருந்தான் ரவி. அந்த இதமான சூழல் அவனை வேறுவிதமான கற்பனைகளில் பிடித்துத் தள்ளிவிட்டது. அவனையும் மீறி இப்பொழுது அவனுக்குள் அகிலா ஓடியாடிக் கொண்டிருந்தாள்.

இதேபோல ஒரு குளுமையான ஏர்கண்டிஷன் சூழலில் திரையரங்கு ஒன்றில் அவள் மேல் சாய்ந்து

கிடந்ததும் அப்போது அவள் பேசியதும் தான் அவ னுக்குள் ஓடியபடியே இருந்தது.

"ரவி..."

"உம்!"

"இந்த ஏ.சி. ரொம்ப இதமா இருக்குதானே?"

"ஏ.சி.யை விட எனக்கு நீதான் அகிலா அதிக இதம்..."

"ஏன்- என்னையே கூட ஏ.சி. மெஷின்னு சொல்லுங் களேன்."

"அதுல என்ன சந்தேகம். காதலியை நினைக்கும் போதெல்லாம் காதலன் மனசு ஜில்லுன்னு ஆனா காதலியும் ஒரு ஏ.சி.தான்..."

"ஆமாம்... கல்யாணத்துக்குப் பிறகு நான் உங்க வீட்டுக்கு வந்துடுவேன். உங்க வீட்லையோ ஏ.சி. இல்ல. என்ன செய்வீங்க...?"

"அதான் நீ வந்துட்றியே அகி... அப்புறம் என்ன?"

"இந்த அல்வாதானே வேண்டாம்கறது..."

"நீ என்ன சொல்றே அகி... உனக்கு ஏ.சி.ரூம் வேணும்னா சொல். ஒரு ஏ.சி.யை வாங்கி மாட்டிட்டா போச்சு..."

"பொண்டாட்டி வந்த உடனே' அவ கேட்டான்னு ஏ.சி. வாங்கிட்டான் பார்னு உங்க அப்பா அம்மா பேசினா?"

"அப்படி எல்லாம் பேசமாட்டாங்க... உனக்கு ஏன் அந்த அநாவசிய கற்பனை..."

"கற்பனை எல்லாம் இல்லை ரவி. பல வீடுகள்ல இதுதான் யதார்த்தம். நானும் சும்மாதான் அப்படி கேட்டேன். உங்களுக்கு ஒண்ணு தெரியுமா?"

"என்ன?"

"நான் இப்ப எங்க வீட்லையே ஏ.சி. ரூம்ல படுக்கறது இல்ல. அம்மா அதை கரெக்டா புரிஞ்சிகிட்டாங்க. கவலைப்படாதே அகிலா, ரவி ஒருநாள் பெரிய ஆளா வருவான். உங்கப்பாவை விட பெரிய அந்தஸ்துக்கு அவன் போயிடுவான். உன் நம்பிக்கை வீண் போகாதுன்னு சொன்னாங்க. அம்மாக்கு உங்க பேர்ல அவ் வளவு நம்பிக்கை."

"என் ஒரே அத்தையாச்சே. விட்டுத் தருவாங்களா?"

"நீங்க உங்க அத்தை விருப்பத்தை ஈடேற்றியே தீரணும்..."

"ஏன் கவலைப்பட்றே... இப்ப நான் சூப்பரவைசர். ஆனா இன்னும் பத்து வருஷத்துல அந்தக் கம்பெனி யையே வாங்கற அளவுக்குப் பணம் சம்பாதிக்கறதுதான் என் லட்சியம்."

"அவ்வளவு பெரிய ஆசை எல்லாம் வேண்டாம் ரவி. நீங்க உங்க ஆரத்தி கார்ப்பரேஷனுக்கு ஒரு ஜெனரல் மேனேஜர் ஆகுங்க, அது போதும் எனக்கு..."

"இல்ல அகிலா.. உங்கப்பாவை விட ஒரு காசாவது கூட சம்பாதிச்சாதான் எனக்கு மனசு சாந்தியடையும். அவர் ஏன்தான் இப்படி அந்தஸ்து காய்ச்சல் பிடிச்சு அலையராறோ எனக்கே தெரியலை."

"அவரை விடுங்க... அவரா உங்ககூட வாழப் போறது? நான்தானே வாழப்போறேன்."

"அது போதும் அகிலா எனக்கு. நீ என்கூட இருந்தா நான் வானத்தைக்கூட வில்லா வளைச்சுடுவேன்"

அவன் சொல்ல அவள் காசு சிதறியதுபோல கலகலவென சிரித்த அன்றைய அந்த நினைவுகள் அவ்வளவும் ஒன்று திரண்டு அவன் முன்னால் ஊர்வலமாய் போயிற்று.

'இப்படி எல்லாம பேசியவள் எப்படி இன்னொருவன் பின்னால் போனாள்?' - இந்தக் கேள்விக்கு மட்டும் விடையே தெரியவில்லை.

கண்ணைக் குத்தியதுபோல வலித்தது. உடம்பில் ஓடும் ரத்தமெல்லாம் கண்ணீராக மாறி கண்ணிரண்டின் வழியாகக் கொட்டவும் ஆரம்பித்தது. "சே- நான்தான் எவ்வளவு அதிர்ஷ்டக்கட்டையான ஒரு பிறவி!"

தன்னைத்தானே நொந்துகொண்டே செயற்கைக் காலைப் பார்த்தான். 'இந்தக் காலுக்கு இனி எதாவது ஒரு எஸ்.டி.டி. பூத்தில் உட்கார்ந்து போன் போட்டுத் தரலாம். அதில் வரும் ஐந்தும் பத்தும்தானா என் சம்பாத்யம்? இல்லாவிட்டால் இப்படி யாருமில்லாத வீட்டில் உட்கார்ந்துகொண்டு காவல் காக்கும் உத்யோகம். ச்சே!' அவன் மனது வெறுப்பின் உச்சிக்கே போய்விட்டது.

தாத்தா தட்டிக்கொடுத்து தூக்கி நிறுத்திய அவ்வளவு விஷயங்களும் ஒரு புயல் காற்றில் சரியும் கூடாரம் போல சரிந்துவிட்டது அவனுக்குள்.

அவ்வளவுக்கும் அந்த ஏ.சி.யும் தனிமையும்தான் காரணமாக இருந்தது. சாதாரணமாக இந்தமாதிரி தருணங்களில் புத்தி தற்கொலையை நோக்கி வேகமாக ஓடும். அறிவுப் புலன்கள் அவ்வளவும் செயலிழந்து விடும்.

தப்பான விதிப்பாடு இருந்தால் தொலைந்தது. ரவிக்கும் மனப்புழுக்கத்தோடு உயிர் வாழ்வதற்கு செத்துவிடலாம் போலத்தான் தோன்றியது. அமர்ந்திருந்த நிலையில் எழுந்திருந்தவன் டைனிங் டேபிள்மேல் கிடந்த பழத் தட்டையும் அதன்மேல் கிடந்த கத்தியையும் பார்த்தான். மெல்ல நெருங்கி அதைக் கையில் எடுத்துக் கொண்டான். உற்றுப் பார்த்தான். கூர்மையான ஸ்டெயின்லெஸ் ஸ்டீலில் ஆன கத்தி, பளபளவென்று மின்னியது.

அதனால் வயிற்றில் வேகமாக குத்திக்கொண்டால் அதிகபட்சம் மூன்று நான்கு நிமிடங்களில் உயிர் போய் விடும் என்று உள்மனது கணக்கு போட்டது. அதே சமயம் அந்த நான்கு நிமிட வேதனை நரக வேதனையை விட கொடுமையாக இருக்கும் என்று ஒரு பயமும் எச்சரிக்கையாக மாறி அவன் கையை சற்றுக் கட்டியது. இதற்கு தூக்கில் தொங்குவது உத்தமம் என்றும் ஒரு குரல் உள்ளிருந்து ஒலித்தது.

இதை எல்லாம்விட மின்சாரத்தைத் தீண்டி அதன் தாக்கத்தில் உயிர்விடுவது பார்ப்பதற்கு விபத்து போலவும் காட்டும் என்று இன்னொரு குரல் புத்தி சாலித்தனமாய் ஒலித்தது.

நிமிர்ந்து ஸ்விட்ச் போர்டு எங்கிருக்கிறது என்று பார்த்தான். வயர் எதுவுமே கண்ணுக்குத் தெரியவில்லை. நவீன முறையில் கட்டப்பட்ட வீடாயிற்றே அது. அப்பொழுது பார்த்து கதவு தட்டப்படும் சப்தம்! அந்த வேளைக்கு அது அதிர்ச்சியாகக் கூட அவன்வரையில் இருந்தது. கத்தியை பேண்ட் பாக்கெட்டில் செருகிக் கொண்டவன் கதவைத் திறப்பதற்காகக் கதவை நோக்கி நடந்தான். கதவுக்கு அப்பால் அந்த நான்கு பேர்கள்!

# 9

'மாறும் கால நேரத்தை நம்முன் கொண்டு செல்வதே காற்றுதான். அதேசமயம் யாராக இருந்தாலும் விடியற்காலைப் பொழுதும், மாலைப் பொழுதும் இன்பமாக மனத்திற்கு தோன்றக் காரணமே அவ்வேளையில் நிலவும் இதம்தான். எவ்வேளையும் மனதுக்கு இதமாக அமைய காற்றை வசப்படுத்தக் கற்றுக்கொண்டால் போதும். காற்றை நமக்கு ஆதரவாகப் பழக்கிக்கொள்ளும் ஒரு வித்தையே பிராணாயாமம். இதன் உச்சபட்ச பயிற்சியில் விளைவதுதான் குண்டலினி யோகம். குண்டலினி யோகத்தில் நமது சிரசாகிய மேல்பாகத்தில் நாம் முதுகெலும்பு வழியாக நம் மலப்பைக்குக் கீழே கிடக்கும் கோலிகுண்டு போன்ற குண்டலினியைக் கொண்டு செல்வோம்.

இது அவ்வளவு சுலபமல்ல... அடாத் அசராத பயிற்சி இதற்கு வேண்டும். இதற்கு பலப்பல வருடங்கள் கூட ஆகலாம். இது வசப்பட நல்ல விதிப்பாடும் வேண்டும். ஏன் என்றால் இது ஒருவர்க்கு வசப்பட்டுவிட்டால் அவர் குண்டலினி யோகத்தால் குண்டலினி சக்தியை சகஸ்ராரத் திற்குக் கொண்டு சென்றுவிடுவார். அப்போது உடல் முழுக்க ஒரு பரவச உணர்வு தோன்றி பேரின்பம் ஏற்படும். இது மிக அழகிய நூறு

**மகளிரை ஒரேசமயம் ஒருவன் புணரும்போதும் கிட்டாது. அவ்வளவு பெரிய இன்பமாகும்.**

கதவைத் திறந்தவன் எதிரில் அந்த நான்கு பேர்கள்! பார்க்க மிடுக்காய் முழுக்கை சட்டை போட்டு டை கட்டி அதற்குமேல் கோட் அணிந்து கையில் ஃபைல்களுடன்!

"யார் சார் நீங்க...? உங்களுக்கு என்ன வேணும்?"

"இதுதானே மிஸ்டர் பிரதாப் வீடு...?"

"ஆமாம்... நீங்க...?"

அவன் கேள்விக்கு அவர்கள் பதில் கூறவில்லை.

விறுவிறுவென்று உள்ளே நுழைந்தனர்.

நாலாபுறமும் பரபரப்போடு பார்த்தனர்.

ரவிக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"யார் சார் நீங்க..? எதுக்கு இப்படி உள்ற வர்றீங்க?"-ரவியும் ஓங்கி குரலெடுத்தான்.

"வீ ஆர்ஃப்ரம் கஸ்டம்ஸ் டிபார்ட்மெண்ட்..."

"கஸ்டம்ஸா... ஏர்போட்லையும், ஹார்பர்லையும் தானே உங்களுக்கு ட்யுட்டி."

"நீ யார் மேன்?"

"நான் யாரா இருந்தா என்ன... இந்த வீட்டு ஓனர் மிஸ்டர் பிரதாப் ஹாஸ்பிட்டல்ல பெட் பேஷண்ட்டா இருக்கார். அவர் இங்க இல்லாதப்ப நீங்க இங்க எதை செய்யவும் நான் அனுமதிக்கமாட்டேன்."

"நீ யார் எங்களுக்கு அனுமதி தர்றதுக்கு... நாங்க செக் பண்ண யாருடைய அனுமதியும் தேவை இல்லை. மீறி யாராவது தடை செய்தா கைது செய்யலாம். தெரியுமா?"

ஒருவன் கேட்ட தொனியே ரவியின் காதைத் திருகியது.

"அந்த பிரதாப் தங்கம் கடத்தறவன். அப்படி வரும்போதுதான் விபத்து ஏற்பட்டிருக்கு. எங்களுக்கு எல்லா விஷயமும் தெரியும்..."

"நோ சார்... நான் இந்த வீட்டுக்கு இப்ப எஸ்கார்ட். சாதாரணமா ரைட் வரும்போது வீட்ல யாராவது இருக்கணும்னு ஒரு விதி இருக்கு. யாரும் இல்லாத வீட்டைப் பூட்டி சீல் வைக்கலாம். ஆனா உள்ள தன்னிச்சையா ரைட் பண்ண உங்களுக்கு அதிகாரம் கிடையாது..."

"ஓஹோ... ரூல்ஸ் பேசறியோ... அதெல்லாம் நேர்மையா பிசினஸ் பண்றவங்களுக்கு. பிரதாப் மாதிரி கடத்தல் பார்ட்டிகளுக்குக் கிடையாது"

பதிலோடு ஆளுக்கொரு அறைக்குள் அவர்கள் நுழையப் பார்த்தனர்.

"ஒன்மினிட்... நான் மிஸ்டர் பிரதாப்புக்குத் தகவல் கொடுக்கறேன். அவர் மனைவி ஆஸ்பத்திரிலதான் இருக்காங்க. அவங்களாவது வந்துடட்டும்."

"யார் வந்தாலும் வராவிட்டாலும் எங்க ட்யூட்டியை நாங்க செய்யத்தான் போறோம். சார் நீங்க அந்த பீரோவை உடையுங்க. சார் நீங்க மெட்டல் டிடெக்டரால ஃப்ளோர்... அப்புறம் சுவர்.... அப்புறமா கட்டில்

சோபான்னு எல்லாத்தையும் பரிசோதனை பண்ணுங்க சார். ஒருத்தர் மாடி மேல இருக்கற வாட்டர் டேங்க்குக் குள்ள இறங்கியும் பார்த்துடுங்க. அப்புறமா செப்டிக் டேங்க்கு போற ரிசர்வ் ஏரியா சானலையும் பாருங்க. பெரும்பாலான திருட்டுப்பசங்க நாத்தம் பிடிச்சு இடத்துலதான் தங்கத்தை மறைச்சு வைப்பாங்க."

ஒருவன் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்க மற்ற மூன்று பேர்களும் பரபரப்போடு ஓடினர். ரவிக்கு வியர்த்தது.

வேகமாக நடந்து சென்று டெலிபோனை எடுத்தான். அப்போதுதான் பிரதாப்பின் தொடர்பு எண் தன்னிடம் இல்லை என்பதே உரைத்தது. சட்டென்று ஹாஸ்பிட்டலுக்கு போன் செய்ய முடிவு செய்து பக்கத்தில் கிடந்த டைரக்டரியை எடுத்து அதில் கண்களை ஓட்டினான். நல்லவேளை.. நம்பர் அகப்பட்டது.

"ஹலோ... கே.கே. ஹாஸ்பிட்டல் ரிசப்ஷனா?"

"யெஸ் சார்..."

"நான் அங்க அட்மிட் ஆகியிருக்கற மிஸ்டர் பிரதாப், இல்லேன்னா அவங்க மனைவியோட அவசரமா பேசணும்."

"வெரி சாரி சார்.. பிரதாப் சாருக்கு ஒரு ஆபரேஷன் பண்ணப் போறதால அவர் இப்ப மயக்க ஊசி போடப் பட்டிருக்கார். அவங்க மனைவி இப்பத்தான் கொஞ்சம் முந்தி வீட்டுக்குக் கிளம்பிப் போனாங்க..."

"மைகாட்... அவங்க இங்கதான் வந்துகிட்டிருக்காங் களா... தேங்க்யூ... தேங்க்யூ..." - பதற்றத்தோடு ரிசீவரை வைத்தான்.

அறை ஒன்றில் அந்த நான்கு பேரில் ஒருவன் பீரோவை உடைத்துக் கொண்டிருந்தான். ஆக்ரோஷ மான தாக்குதலில் பீரோவும் உடைய உள்ளே துணி மணிகள், நகை நட்டுகள் இருந்தன. அவைகளை ஒரு, காட்டான் போல அள்ளி ஒரு துணிப்பையில் போட்டுக் கொண்டான். ரவிக்கு அவன் செய்கை ஒரு ஆபீசர் செய்கை போலவே இல்லை.

"சார் என்ன நீங்க... ஏதோ கொள்ளைக்காரங்க மாதிரி அள்ளிப் போட்டுக்கிறீங்க. எதை எடுக்கறீங்கன்னு எண்ட்ரி போட வேண்டாம்?"

அந்த நொடி அந்த நபர் சட்டென்று தன்வசம் உள்ள துப்பாக்கியை எடுத்தான். ரவியை நோக்கி நீட்டியவன்—

"நீ தொணதொணன்னு லா பேசிகிட்டிருக்கே. உன்னை சுருட்டி போடுறேன் பார்.." - அவன் துப்பாக்கி யில் இருந்து வரிசையாக இரு குண்டுகள் ரவியின் கட்டைக்கால் நோக்கிச் சீறி வந்தது. ரவி அதிர்ச்சியோடு கீழே விழுந்தான்.

அப்போது இன்னொருவன் வந்து, "பார்ட்டி... அந்த ரூம்ல சேஃப்ட்டி லாக்கர்ல அவ்வளவு தங்கமும் இருக்கு. ஆனா, அதை திறக்க முடியல..." என்றான்.

"இரு நான் வர்றேன்..." - துப்பாக்கியால் சுட்டவன் பீரோவை படார் என்று அடைத்தபடி அவனோடு புறப்பட்டபோது, ரவியிடம் ஓர் ஆவேசம். ரவிக்குப் பக்கத்தில் ஒரு பேப்பர் வெயிட் கிடந்தது.

அது புயல் வேகத்தில் அவன் நெற்றிப் பொட்டில் வந்து மோதியது. அவனுக்கும் கிறுகிறுவென்று சுற்றிக்

கொண்டு மயக்கம் வந்துவிட்டது. கூட இருந்தவன் மிரண்டு போக - ரவியின் வசம் இருந்த கத்தி அவன் கழுத்தை நோக்கி 'விஷ்க்' என்று பாய்ந்து வந்து தொண்டை வரை உள் ஏறியது. அவன் கத்தக்கூட முடியாதபடி சுருண்டு விழுந்து கால்களை உதைத்துக் கொள்ளத் தொடங்கினான். இன்னும் இரண்டே பேர். அவர்களைச் சமாளிக்க சுவரில் தொங்கிய ஒரு கண்ணாடி போட்ட கலைப்படமும், மரக்கட்டையால் ஆன குபேரன் சிலை ஒன்றும் ரவியின் கையில் அகப் பட்டது.

அவர்களும் சப்தம் கேட்டு ஓடிவந்த வேகத்தில் தாக்குதலுக்கு உள்ளாயினர். கண்ணாடிச் சட்டம் ஒருவன் வயிற்றைக் கீறி ரத்தத்தைப் பீறிட விட்டது. குபேரன் சிலை இன்னொருவன் மண்டையில் பட்டு அந்த நபரின் முகமெல்லாம் ரத்த சகதியாகிவிட்டது.

ரவியும் புத்திசாலித்தனமாக தொலைபேசியில் எண் நூறை டயல் செய்தான். மறுபக்கம் கம்பீரமான குரலில் எஸ்.ஐ. ஒருவர் விபரம் கேட்டார். ரவியும் அட்ரஸை முதலில் சொல்லி 'ஸ்பீடா வாங்க சார்' என்றான். அந்த நொடி அவன் தலைமேல் ஒரு பொம்மை வந்து விழுந்தது. தலையில் அடிபட்டுக் கீழே விழுந்தவனின் பதிலடி. ரவிக்கு மயக்கமே வந்துவிட்டது. எதிரில் உள்ள காட்சி அப்படியே அளைந்து கண்ணிரண்டும் கறுப்பு நிறுத்துக்குள் முங்கினாற் போல் இருந்தது. அவ்வளவு தான் - பொத்தென்று தொலைபேசி அருகேயே அவனும் விழுந்துவிட்டான்.

# 10

'காலநேரங்களில் அமிர்த நாழிகைப் பொழுது என்று ஒன்று உள்ளது. இந்தப் பொழுது இன்பமய மானது. சாந்தமான குணமுடையது. அளவற்ற அமைதியைத் தரவல்லது. சுருக்கமாகச் சொல்லப் போனால் மிக மிக அதிர்ஷ்டம் நிரம்பி வழியும் ஒரு பொழுது இது. இந்தப் பொழுது சில நாழிகை நேரமே நீடிக்கும். வளர்பிறை காலத்தில் குருவின் நட்சத்திரத்தன்று பகல் வேளையில் குறிப்பாக உச்சிப்பொழுதுக்கு முன்பும் பின்பும் வருகின்ற அமிர்த நாழிகையின் மைய காலத்தில் ஒருவர் அமிர்த நாழிகைகளுடன் அதிர்வுகளுடன் கூடிய காற்றைச் சுவாசிக்கும்போது அவர் மனத்தில் என்ன நினைக்கிறாரோ அது அப்படியே நடந்தேறும். அப்போது செய்யும் செயல் நிகரில்லாத வெற்றி பெறும். அந்த வெற்றியும் ஒரு தொடர் வெற்றியாக நீண்டுகொண்டே போகும். பெரும்பாலும் அமிர்த நாழிகைப் பொழுது எல்லா உயிர்களுக்குமே அமைதி தரும் ஒரு பொழுதாகவும் இருக்கும்.

நம்மையும் அறியாமல் இன்ன காரணம் என்று தெரியாமல் இலேசான ஒரு மன நிலையில் நாம் மிதப்பது என்பது இந்தமாதிரி காலத்தில்தான்.

இந்தக் காலத்தின் நுட்பம் தெரிந்த சித்தர்கள் இவ்வேளையில் ஆழ்ந்து சுவாசித்து மனத்தை

**ஒருமுகப்படுத்தித் தங்கள் சுவாசத்தை சமமாக வைத்துக்கொள்வார்கள். அதனால் இவர்கள் மனம் மட்டும் உலகம் எப்படி இருந்தபோதிலும் அமைதியிலும் இன்பத்திலும் திளைத்தபடி இருக்கும்!'**

ரவி கண் திறந்தபோது அவனுக்கு அடுத்தடுத்து ஆச்சரியங்கள் காத்திருந்தன. முதலாவதாக அவன் ஆஸ்பத்திரியில் படுக்கையில் இருந்தான். அவன் முன்னே தாத்தாவோடு ஒரு போலீஸ் அதிகாரியும் அவன் அப்பா அம்மாவும் கூட இருந்தனர்.

அவன் தலையிலும் பெரிதாகக் கட்டு போடப்பட்டிருந்தது. ஒருவர் முகத்திலும் சுரத்தில்லை.

தாத்தா மட்டும் "நான் அப்பவே சொல்லலை... அவன் கண் திறந்திடுவான்னு..." என்று உற்சாகத்துடன் போலீஸ் அதிகாரியிடம் கூறினார்.

"தாத்தா..."

"தாத்தாவேதான்... ஸ்ட்ரெயின் பண்ணாதே ரவி. உன் தலைல பெரிய அடிபட்டிருக்கு."

"தெரியும் தாத்தா... அடிமேல அடி படும்கறது இதுதானா தாத்தா?" - அவன் கேட்டபோது குரல் உடைந்துவிட்டது.

"தப்பு ரவி... உனக்கு விழுந்தது அடிங்கற பேர்ல படி..."

"போதும் தாத்தா. வழக்கம் போல சமாளிக்காதீங்க. அந்தத் திருட்டுப் பசங்க என்ன ஆனாங்க?"

"இதோ சாரைக் கேளு- இவர்தான் அவங்கள பிடிக்க ஐ.ஜி.யால நியமிக்கப்பட்டவர். ஸ்பெஷல் போலீஸ் ஆபீசர் தாமோதரன்..."

தாத்தாவின் அறிமுகத்தைத் தொடர்ந்து தாமோதரன் சற்று முன்னால் வந்தார். "கங்கிராஜுலேஷன்ஸ் சார்... அந்த நாலு பேருமே போலீஸ் தேட்ற கல்பிரிட்ஸ். அவங்கள உயிரோடையோ இல்ல பிணமாவோ யார் பிடிச்சு தந்தாலும் அவங்களுக்கு கேஷ் அவார்டு உண்டு. அந்த அளவுக்கு அவங்க நொட்டோரியஸ்..."

ரவிக்கு அவர் பேச்சு சற்று வெல்லத்தை சப்பியது போல் இருந்தது.

"சார் கொஞ்சம் நகருங்க- முதல்ல இந்த அதிர்ஷ்டப் பொன்னியோட குங்குமத்தை அவன் நெத்தியில வெச்சு விட்றேன்..." என்று தாத்தா சட்டைப் பாக்கெட்டில் இருந்து ஒரு பொட்டலத்தை எடுத்து குங்குமத்தை அவன் நெற்றியில் இட்டார்.

"தாத்தா... நீங்க அந்த அதிர்ஷ்டப் பொன்னிய கெட்டியா பிடிச்சிகிட்டீங்களா?"

"யெஸ் பேராண்டி. நீயும் நானும் அங்க போன நேரம் ஒரு நல்ல நேரம்னு நினைக்கறேன். உன் வாழ்க்கையே இப்ப எந்த அளவுக்கு மாறிப்போச்சு தெரியுமா?"

"என்ன தாத்தா சொல்றீங்க..."

"மிஸ்டர் அருணாச்சலம்-! நான் சொல்லிட்றேனே-"

"ஓ... தாராளமா சார். போலீஸ் ஆபீசர் நீங்க சொல்றதுதான் ரொம்ப சரியா இருக்கும்."

"மிஸ்டர் ரவி. ஒரு கால் ஊனமா இருந்தும் நீங்க செய்திருக்கறது பெரிய சாதனை. சாதாரணமா இந்த

மாதிரி கட்டத்துல உங்க அளவு மனத்துணிவைக் காட்ட யாருக்குமே தைரியம் வராது. அவங்க நாலுபேரும் அவ்வளவு மோசமானவங்க. கிட்டத்தட்ட நாலு வீரப்ப னுங்க. அவங்களோட வேலையே ஃபோர்ஜரி, ராபரி, பிளாக்மெயில், 420 வேலைங்கதான். அவங்களைப் பிடிக்கப் பெரிய உதவி செய்திருக்கீங்க. உங்களுக்கு ஜனாதிபதி விருதே கிடைக்கலாம். அப்படியே உங்க ளுக்கு எங்க டிபார்ட்மெண்ட்லையே சிக்னல் செக்‌ஷன்ல உக்காந்து பார்க்கும்படியான வேலைக்கும் வாய்ப்பு இருக்கு... நீங்க விரும்பினா...”

அந்த ஆபிசரின் பேச்சு ரவிக்குள் ஒரு திக்கு முக்காடலையே ஏற்படுத்தியது.

“ரவி.. சார் சொன்னது ஒரு பகுதிதான். தங்களோட தங்கத்தைக் காப்பாத்தி தங்களுக்கு உதவி செய்ததுக்காக மிஸ்டர் பிரதாப்பும் சசிரேகாவும் உனக்கு ஒரு பெரிய ஆச்சரியத்தைத் தரப்போறாங்க...”

ரவி தாத்தாவின் பீடிகைக்கு ஒரு பதில் கேள்வி கேட்கவில்லை. பனித்த கண்களுடன் கன்னக் கதுப்பு துடிக்கப் பார்த்தான்.

“உன் வரைல நீ இனி பழைய ரவி. பிரதாப்புக்கும் சசிரேகாவுக்கும் புத்ர பாக்யம் இல்லை. உன்னையே தங்களோட மகனா தத்து எடுத்துக்க விரும்பி உங்க அப்பா அம்மா கிட்டேயும் கேட்டாங்க...”

தாத்தா அடுத்த இன்ப அதிர்ச்சியுடன் தன் மகனையும் மருமகளையும் பார்த்தார்.

“ஆமாம்ப்பா- என்கிட்ட பிரதாப் பேசினார். அந்தம்மா மடிப்பிச்சையே கேட்டுட்டாங்க. நாங்களும் சரின்னுட்

டோம். எங்ககூட இருந்தா நீ ஒரு மகனா மட்டும்தான் இருப்பே. அங்க போனா நீ ஒரு கோடீஸ்வரன். உன் அத்தை மாமா எதிர்க்க நீ வாழ்ந்து காட்டவும் உனக்கு ஒரு சந்தர்ப்பம் வந்துருக்கு. அதை ஏன் நாங்க பாசம்கற பேரால கெடுக்கணும்?" - அவன் அப்பா திருப்பிக் கேட்டார்.

"ஐயோ அப்பா அம்மா... எனக்கு பணமெல்லாம் இப்ப பெரிசு இல்லப்பா. என்ன காரியம் பண்ணீங்க?" என்று சட்டென்று உணர்ச்சிக்குள் மூழ்கி கண்ணீரைப் பீறிட்டான்.

"ரவி. நீ 'அதிர்ஷ்டக் கட்டை'ன்னு சொல்வியே அது நிஜம் இல்லை. ஒரு தங்க சாம்ராஜ்யத்துக்கே நீ முதலாளி ஆகப்போறே. ஒரு அப்பா அம்மாதான் எல்லாருக்கும்.. ஆனா உனக்கு இரண்டு அப்பா அம்மா-யாருக்குக் கிடைக்கும்...? யோசிச்சுப் பாரு...!"

தாத்தா ஒரு புதிய கோணம் காட்டினார்.

"இப்பவும் சொல்றேன் தாத்தா... நான் அதிர்ஷ்டக் கட்டைதான். நான் பெருசா ஆசைப்பட்டதை எப்பவோ இழந்துட்டேன். அதுக்கு ஈடா இந்த உலகமே தான் பரிசா கிடைக்கட்டுமே - என் மனசு சந்தோஷப்படாது தாத்தா.."

அவன் பெரிதாக ஆசைப்பட்டது எதை என்பது தாத்தாவுக்குத் தெரியும். ஏன்... அவன் அப்பா அம்மா என்று எல்லோருக்குமே தெரியும். அவர்களால் அவனுடைய அந்தக் கேள்விக்கு மட்டும் சட்டென்று ஒரு சமாதானத்தைச் சொல்ல முடியவில்லை. போலீஸ்

ஆபீசருக்கு மட்டும் அவன் எதைக் குறிப்பிடுகிறான் என்பது தெரியவில்லை.

திருதிருவென்று விழித்தார். அப்போது அங்கே அடுத்ததாக ஒரு அதிசயம் நடக்கத் தொடங்கியது.

அவன் அத்தை சீதாலட்சுமியும், மாமா ராம துரையும் அனலில் வாடிய கிழங்கு போன்ற முகத் துடன் அங்கு நுழைந்திருந்தனர். அத்தை ஓடிவந்து அவன் தலைமாட்டில் நின்றுகொண்டு “ரவி...” என்று பெரும் குரலெடுத்து அழுதாள். ராமதுரை சிலைபோல நின்று கண்ணீர் விட்டார். அவர் முகத்தில் சிரைக்கப் படாத இரண்டு மூன்று மாத தாடி!

“அத்தே... மாமா... நீங்களா?”

“நாங்களேதாம்ப்பா. உன் மதிப்பு தெரியாத எங்கள காலம் நல்லாவே தண்டிச்சிடிச்சிப்பா...”

“என்னத்தே சொல்றீங்க...?”

“என்னத்தடா சொல்ல... எதைச் சொல்ல... எதுவும் உனக்குத் தெரியவும் வேண்டாம்...”

“தாத்தா.. இவங்க என்ன சொல்றாங்க...”

“எங்கடா இப்பத்தானே ஆரம்பிச்சிருக்காங்க. மெல்ல மெல்ல சொல்வாங்க. கேள்...”

“அத்தே... மாமா... நீங்க ஏன் இப்படி வாடி வதங்கி இருக்கீங்க. மாமா முகம் சூரியனாட்டம் ஜொலிக்குமே அந்த முகமா, இப்படி?”

“ரவி... அடிக்கடி நான் காலத்தைப் பத்தி உன்கிட்ட பேசுவேன். ஞாபகம் இருக்கா?”

"இப்ப எதுக்கு தாத்தா அந்தப் பேச்சு?"

"இப்பத்தான் அதைப்பத்திப் பேசணும். சரியான தருணம் இது. யாரும் எப்பவும் 'நாங்க பெரிய பலசாலி, களாக்கும்'னு நினைச்சு ஆட்டம் போட்டுடக் கூடாது. ஏன்னா யாருக்கு எப்ப என்ன நடக்கும்னு தெரியாது. காலம் ஒரு ரங்கராட்டினம். பாத்துகிட்டு இருக்கும் போதே ஒருத்தர் மேல போவார்; மேல இருந்தவங்க கீழ வருவாங்க... இப்ப இவங்க வந்துருக்காங்க..."

"ஐயோ விபரமா சொல்லுங்களேன்..."

"என்னத்த சொல்ல... உன்னை வேண்டாம்னு தள்ளிட்டு உன் அகிலாவை ஒரு பெரிய பணக்காரனுக்கு கட்டிக் கொடுத்தாங்க. தாலி கட்டிக்கறதுக்குக் கொஞ்ச நேரம் முந்திகூட அவள் ஓடி உன்கிட்ட வந்துடலாம்னு நம்பிக்கையோட இருந்தா. ஆனா இதோ நிக்கறாரே உன் மாமா... விஷ பாட்டிலை கைல வெச்சுக்கிட்டு அவளைக் கார்னர் பண்ணி மணவறைல உக்கார வெச்சு அந்தப் பணக்காரனுக்கும் தாரைவார்த்துக் கொடுத்துட் டாரு. அவன்கிட்ட பணம் இருக்கற அளவுக்கு ஆரோக்யம் இல்லாம போயிடிச்சு. கல்யாணம் ஆன ஒருவாரத்துலையே ரத்தவாந்தி எடுத்துருக்கான். டாக்டர்கிட்ட ஓடியிருக்காங்க. அப்புறம்தான் தெரிஞ்சது அவனுக்கு புற்றுநோய்னு..."

"ஐயோ தாத்தா... அப்புறம்?"

"அப்புறம் என்ன...? மேல போற தேதிய குறிச்சுப் கொடுத்து அனுப்பிட்டாங்க. அவனும் அந்த குறிப்பிட்ட தேதிக்கு முந்தியே மண்டைய போட்டுட்டான்.

"தாத்தா... இது என்ன கொடுமை தாத்தா...?"

"கொடுமைதான். இதை எல்லாம் உனக்கு தெரியாம மறைக்க நான் பட்டபாடு அதைவிட கொடுமை ஆச்சே..."

"இப்ப மட்டும் ஏன் சொன்னீங்க? நான், அகிலா எங்கையோ நிம்மதியா இருக்கான்னு நினைச்சுக்கிட்டு கொஞ்சமாவது அந்த நிம்மதியோட இருந்திருப்பேனே-?"

"நீ இருப்பே.... ஆனா இவங்களாலதான் இருக்க முடியாது. கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் பண்ண வந்திருக்காங்க..."

"தாத்தா.. நான் ஒண்ணு கேட்டா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே..." - ரவி படுத்திருந்த நிலையில் இருந்து கேட்டபடியே எழுந்து அமர்ந்தான்.

தாத்தாவுக்கு அவன் என்ன கேட்கப் போகிறான் என்பது தெரிந்துவிட்டது. அவன் கண்களையே பார்த்தவர், "தெரியும்டா பேராண்டி, நீ என்ன கேக்கப் போறேன்னு எனக்குத் தெரியும். நீ கேக்கணும்கறதுதான் என் விருப்பமும்! நான் முந்தியே சொன்ன மாதிரி உன் பழைய வாழ்க்கைக்கு நீ திரும்பப் போற- அதிர்ஷ்டக் காற்று உன்மேல வீச ஆரம்பிச்சிடிச்சு. நீ காலை இழந்தாலும் காதலை இழக்கலைங்கறது எனக்குத் தெரியும். கேள்.. தாராளமா கேள். நல்லா சத்தம் போட்டுக் கேள்."

"தாத்தா.."

"முதல்ல கேளுடா..."

"அப்பதான் அகல்யாவை எனக்குத் தரலை. இப்பவாவது..." - அவன் முடிக்கவில்லை.

அவனது அத்தையும் மாமாவும் கதறிக்கொண்டு அவன் மடிமேல் ஆளுக்கொரு பக்கமாக விழுந்து முகத்தைப் புதைத்துக்கொண்டு வெடித்து அழத் தொடங்கிவிட்டனர்.

"ஐயோ அழாதீங்க. அதான் நான் இருக்கேன்ல."

"அப்படிச் சொல்லுடா என் பேராண்டி. ஆசை, பாசம், உறவுதான் எப்பவும் பெருசு. அது யார்கிட்ட இருக்கோ அவங்களாலதான் இப்படி சொல்லவும் முடியும். பணம்கற காகிதத்தை பெருசா நினைச்சவங்க நல்லா அழட்டும். அதுல ஒண்ணும் தப்பே இல்லை..."

தாத்தா சமயம் பார்த்து வாரவும் செய்தார். போலீஸ் ஆபீசுக்கும் மனம் நெகிழ்ந்துவிட்டது.

"மிஸ்டர் ரவி... மனசு மட்டும் திடமா இருந்துட்டா போதும். எந்த ஊனமும் ஒண்ணும் செய்ய முடியாதுங் கறதுக்கு நீங்க ஒரு எடுத்துக்காட்டு. ஒரு விதவைப் பொண்ணுக்கு வாழ்க்கை கொடுக்க முன்வந்த உங்க பெருந்தன்மையும் காதலும் ரொம்ப ரொம்ப கிரேட்" என்று அவன் கைகளைத் தேடிப்பிடித்துக் குலுக்கி மகிழ்ந்தார்.

அவர்கள் இருவரும் அழுதுகொண்டே இருந்தனர். ரவி தாத்தாவை அருகில் அழைத்து அவர் காதோரமாக "எங்க தாத்தா, இப்ப அகிலா இருக்கா?" என்று கேட்டான்.

தாத்தா அவன் தலையை வருடியவராக "நம்ப வீட்லதாண்டா. நான் போய் கூட்டிகிட்டு வந்துட் டேன்ல? அந்த மாப்ளைப் பயலையும் சும்மா சொல்லக்

கூடாது. உங்க காதல் தெரிஞ்சி சாகறதுக்கு முந்தியே தான் கட்டின தாலியைக் கழட்டி கொடுக்கச் சொல்லி வாங்கிட்டான். அகிலாகூட தயங்கினாள். ஆவேசமா ஒரே புடுங்கு... தாலி அவன் கையோட போயிடிச்சு. வாஸ்தவத்துல அவ விதவை இல்ல. வாழ்க்கை விபத்துல தப்பிச்சவ..."

"அப்ப எனக்குக் காலு... அவளுக்குத் தாலியா?"

"ஆமாம்... ஆனா நீங்க சாதாரணமா சேர்ந்திருந்தா இப்ப இருக்கற இந்த பெருமை ஏது? சந்தோஷம் ஏது? ஒரு கோடீஸ்வர அப்பா அம்மாதான் உனக்கு ஏது?"

"அதுவும் சரிதான் தாத்தா... நீங்க மட்டும் இல்லேன்னா... அதையும் சேர்த்துக்குங்க..."

தாத்தா அவனை அப்படியே கட்டிக்கொண்டார்.

**எ**ளிமையான முறையில் ரவி - அகிலா திருமணம் நடந்து முடிந்தது. எல்லோர் காலிலும் விழுந்து எழுந்த இருவரும், தாத்தா பளபளவென்று துடைத்து வைத்திருந்த அப்பாச்சி பைக் அருகில் வந்தனர்.

"பேராண்டி... உன் பைக்! ரெடியா இருக்கு. அங்க அதிர்ஷ்டப் பொன்னியம்மனும் உங்களுக்கு ஆசீர்வாதம் பண்ண ரெடியா இருக்கா... கிளம்புங்க!" என்றார்.

"தாத்தா நீங்கல்லாமும் வாங்க தாத்தா..."

"நாங்க வராமலா? எங்க வாழ்க்கையும் அதிர்ஷ்டத்துக்கு மாற வேண்டாமா? அதோ..."

தாத்தா கைகாட்டிய திக்கில் ஒரு பெரிய வேன். அதைப் பார்த்த சந்தோஷத்தோடு ரவி பைக்கை கிளம்பி

னான். அகிலா அவன் பின் அமர்ந்துகொள்ள பைக்கும் புறப்பட்டது. வேன் பின்தொடரத் தொடங்கியது.

பைக்கில் ரவி...

"அகி... நல்லா கட்டிப்பிடிச்சுக்கோ... விழுந்துடப் போறே?"

"நான் இனி எங்கேயும் விழமாட்டேன். நீங்க பார்த்து ஓட்டுங்க..."

"நான் பார்த்துதான் ஓட்றேன். பிகு பண்ணாம கட்டிப்பிடின்னா..." - செல்லமாக அதட்டினான் ரவி.

"சரிடா..." - அவளிடம் ஒரு செல்லமான பதில். அதைத் தொடர்ந்து ஒரு அணைப்பு. பைக்கிடம் ஒரு புதிய சக்தி பிறந்ததுபோல ஒரு வேகம். இருவரையும் காற்று நீவிச் சென்றது. அது அவர்கள் வரையில் 'அதிர்ஷ்டக் காற்று!'